"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்
# KALASAM

ஆடி -ஆவணி - புரட்டாதி - 2007



திருவருள்மிகு
என்பீல்ட்
நாகபூசணி அம்பாள்
ஆலய தேர்த்திருவிழா
சிறப்பிதழ்

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மீகக் காலாண்டிதழ்

**Commercial & Industrial Guarding**
**Call now for a free survey and quotation**

**SECURITY GUARD WANTED**

- **Retail**
- **Construction**
- **24 Hour Radio Patrols**
- **Key Holding**
- **Access Control**
- **CCTV**

# CHARTER SECURITY

A Professional Service Every Time

**1st Floor**
**Cambridge Road**
**Barking**
**Essex**
**IG11 8NR**

**Tel: 020 8507 7717**
**Fax: 020 8507 7702**

மணி 15

# கலசம்
KALASAM

ஒலி 56

E-mail: kalasam @ gmail.com
smsuk77@yahoo.co.uk

சிவமயம்

## அள்ளிக்கொடுப்போம் !எடுப்பதை எடுத்துக்கொள்ளட்டும்

நாம் கற்ற நீதி நூல்கள் பல. பக்தி நூல்கள் வாயிலாகவும், அறிஞர்கள் பிரசங்கங்கள் மூலமாகவும் உணர்ந்தவை பல. வாசித்த, கேட்ட இராமாயண. மகாபாரத, புராணக் கதைகள் ஏராளம். இத்துடன் பரந்த உறவுகள், நெருக்கமான குடும்ப வாழ்க்கைமுறையும் எமக்கு அமைந்தன. இவற்றின் துணையால் வளர்ந்த நாம் ஓரளவுக்கு வாழ்க்கையை சமாளித்து வாழப் பழகிக் கொண்டோம். எமக்குக் வாய்த்த சாதகமான இந்த சூழ்நிலை இன்றைய இளைஞர்களும் எதிர்கால குழந்தைகளுக்கும இல்லை.

நல்லவற்றை தெரிந்து கொள்ளும் வாய்ப்பு எமது பிள்ளைகளுக்கு குறைவாகவே உள்ளது.

இந்த குறைபாட்டை மேலும் சிக்கலாக்க இருக்கவே இருக்கின்றது மேலைநாட்டில் எத்தனையோ நாகரிக, நவீன, பொருளாதார நிலைகளும் அவற்றின் தாக்கமும். இங்கு வளரும் எம் பிள்ளைகளின் வாழ்க்கையை கட்டுப்படுத்தும் காட்சிப்பொருட்களாக இவை நிலைபெற்றுள்ளன. இவற்றின் தாக்கங்களிலிருந்து எமது பிள்ளைகளை நாம் தடுக்க முடியது. பதிலாக மேலதிகமாக எமது சமயக் கருத்துக்களை அள்ளிக்கொடுப்போம். தகாத நிலையற்ற கருத்துக்களுக்குப் போட்டியாக அவற்றிக்கும் மேலாக எமது சமய உண்மைகளையும், எமது பாரம்பரிய விழுமியங்களையும் அவர்களுக்கு புகட்டுவதும், பரப்புவதும் எமது எதிர்கால சமுதாயம் மன அமைதியுடன் வாழவழிகாட்டும். எனவே வாரி வழங்குவோம். சிறிதளவாவது போய்சேரும்

கலசம் ஆசிரியர்

ச. ஆனந்ததியாகர்

*குழந்தைகளுக்கு மகிழ்ச்சியையும் இளைஞர்களுக்கு வாழ்க்கையை நெறிப்படுத்த நீதிநெறிக் கருத்துக்களையும் முதியோருக்கு ஆன்மிக உணர்வையும் ஊட்டுவது எமது சமயக் கதைகள்.*

**நிர்வாகக் குழு**

திரு. சதாசிவம் ஆனந்ததியாகர் (**ஆசிரியர்**) திரு.சி.அற்புதானந்தன் திரு.சி.தம்பு
திரு.சு.வைத்தியநாதன் திரு.வ.இ.இராமநாதன் Dr. ந. நவநீதராசா, திரு. ம.மதிதரன்
செல்வன் லக்ஷன் தியாகராஜா, செல்வன் சுபிந்தன் சூரியகுமார்,
செல்வி அனிற்றா கனகலிங்கம், செல்வி வினோதா சிவஞானம்

**தொடர்பு முகவரி:** SMS 2 Salisbury Road London E12 6AB. Tel/Fax: 020 8514 4732

# சிவசக்தி



எறும்பு முதல் யானையீறான உயிரினங்களின் இயக்கத்துக்க காரணமாயிருப்பது சக்தி. அவற்றுக்குச் சக்தியைக் கொடுப்பது உணவு. பல்வேறு வகையான இயந்திரங்கள் இயங்குவதற்குக் காரணமாயிருப்பது சக்தி. அவற்றை இயக்குவதற்கான சக்தி நிலநெய், நீராவி, மின், அணு, காற்று, சூரியஒளி முதலியவற்றிலிருந்து பெறப்படுகின்றது. கிரகங்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் ஈர்ப்புச் சக்தி உண்டு. நாம் எங்கெங்கு நோக்கினும் அங்கங்கெல்லாம் சக்தியைக் காண்கின்றோம். சக்தி இல்லாத இடமே இல்லை. மேலே கூறப்பட்டனவும், கூறப்படாதனவுமாகிய சடசக்திகளின் இயல்புகளைத தொகுத்து நோக்குவோம்.

சக்தி உண்டென்பதை உணரமுடியுமே தவிர அதைக் காண முடியாது. சக்தியை சேமித்து வைக்கமுடியும். அதை அளந்தறிய முடியும். சக்தியை எமது தேவைக்கேற்ப நாம் விரும்பியவாறு உபயோகிக்கமுடியும். சக்தியை மனிதனால் வெற்றி கொள்ள முடியும். சக்தி வரையறைக்குட்பட்டது. நாம் உபயோகிக்கும் சக்திகள் அனைத்தும சடசக்திகள். சக்தி அழியும் போது அதன் முதலும அழியும். சடப்பொருளிலிருந்து சடசக்தியே தோன்றும். சடப்பொருள்களால் சக்தியைத் தோற்றுவிக்கவும் ஒடுக்கவும் முடியாது. இவ்வாறான மேலுஞ்சில இயல்புகள் சடசக்திகளுக்கிருக்கலாம். காணப்படுகின்ற இவ்வுலகம் இதைப் பாடைக்கும ஆற்றுலடையானொருவன் உண்டென்பதை அனுமானித்தறிய உதவுகின்றது. அது போலச் சடசக்தியும் தன்னோடொப்பிட்டு, இன்ன தன்மையன் என்றறி யொணாச் சிவசக்தியின் இயல்புகளை ஓரளவு அனுமானித்தறிய உதவலாம். அதனால் மேலே தரப்பட்ட சடசக்தியின் இயல்புகளோடொப்பிட்டுச் சிவசக்தியை பற்றி அறிய முயல்வோம்.

அறிவற்ற பொருள்களால் அறிவுள்ளவற்றை இயக்க முடியாது. மனிதனால் இயந்திரத்தை இயக்க முடியுமேதவிர இயந்திரத்தால் மனிதனை இயக்க முடியாது. அறிவுள்ள பொருள்களால் மாத்திரமே அறிவற்ற பொருள்களை இயக்க முடியும். அறிவும் ஆற்றலும் உள்ள ஒருவரால் மாத்திரமே மற்றவர்களைத் தன் ஆணையின் வழி நடக்கச் செய்ய முடியும். இந்தப் பிரபஞ்சம் முழுவதும் ஒழுங்காக இயங்குவதால் இதை இயக்குவோன் ஒருவன் இருத்தல் வேண்டும்.

செய்பவனின்றிச் செயல் நிகழாது. செய்தொலின்றி எந்த ஒரு பொருளும் உருவாகாது. இந்த உலகம் உருவாகியிக்கின்றது. இதை ஒருவா உருவாக்கியிருத்தல் வேண்டும். இதை உருவாக்குவதற்கு அவருக்குச் சக்தி வேண்டும் சக்தியில்லாதவரால் இவ்வுலகம் படைக்கப்பட்டிருக்க முடியாது. அதனால் இவ்வுலகத்தைப் படைத்தவன் சத்தன் என்பது பெறப்படும். சத்தன்-சக்தியை உடையவன். நாம் காணும் சேதன அசேதன பிரபஞ்சம் அனைத்தும் இயங்குகின்றது. அதை இயக்கும் சக்தியொன்றுண்டு. சேதனம் அறிவுள்ளது. அசேதனம் அறிவற்றது.

ஒரு காரியத்தைச் செய்வதற்கு நிமித்த காரணம், முதற்காரணம், துணைக்காரணம், என்னும் மூன்றும் வேண்டப்படும். மின் சக்தியை உண்டாக்குவதற்கு அதை உற்பத்திசெய்யும பொறியாளன் நிமித்த காரணன். நீர் முதற்காரணம். மின் உற்பத்தி செய்யும் எந்திரம் துணைக்காரணம்.

இதைப்போலச் சிவசக்தி தோன்றுவதற்கு முதல் துணை நிமித்தக் காரணங்கள் உண்டா என்பதைப் பார்ப்போம். சிவனுக்கு சொரூப நிலை, தடத்த நிலையென இரு நிலைகள் உண்டு. அவன் நிட்களனாய், நிர்மலனாய் ஞான மயமாய் நிற்கும நிலை சொரூபநிலை. உருவ அருவுருவ, அருவத் திருமேனிகளைக் கொண்டு ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் நிலை தடத்த நிலை. ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் பொருட்டு ஐந்தொழில் செய்யக்கருதிய நிலையில் சிவனிடத்தில் ஒடுங்கியிருந்த சக்தி விரிந்து அவனுக்குரிய வடிவங்களாய் அமைய, சிவன் அவற்றைப் பொருந்தி நின்று ஐந்தொழில் செய்வான்.

பராசக்தி, இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானசக்தி முதலிய சக்திகளாயும், லய, போக, அதிகார சக்திகளாயும் பல்வேறு நிலைகளில் நின்று சிவனுக்குரிய அருட்டிருமேனிகளை ஆக்கியும் தத்துவங்களை இயக்கியும் பல்வேறு தொழில்களைச் செய்யும், பராசக்தி மனோன்மணி, மகேஸ்வரி, உமை, திரு, வாணி என்னும சக்திகளாயும், துர்க்கை, காளி, திருமால் முதலிய சக்திகளாயும் விளங்கும்.

"ஓராய மேயுல கேழும் படைப்பதும்
ஓராய மேயுல கேழும் அளிப்பதும்
ஓராய மேயுல கேழுந் துடைப்பதும்
ஓராய மேயுல கோடுயிர் தானே" என்கிறார் திருமூலர்.

நாடகம் நடிப்போன் பலப்பல வேடங்களைத் தாங்கி நடித்தாலும் தன் நிலையில் திரியாதிருப்பது போலச், சக்தியும் பலப்பல வேடமாகி நின்று அருட்செயல்களைச் செய்கின்ற போதிலும், அச்சக்திகளைப் பொருந்தி நிற்குஞ் சிவன் தன் நிலையிற் திரியாது நிர்விகாரியாகவே இருப்பான். தன்னிடத்தில் ஒடுங்கியிருக்கும் சக்தியை விரியச்செய்யும் சிவனே, இச்சக்தியின் தோற்றத்துக்கு நிமித்த காரணன். சூடு தீயின் குணமாய் இருப்பது போல சிவனின் குணமாய்ச் சிவனிடத்திலிருந்து தோன்றுவதால் சிவசக்தியின் தோற்றத்துக்கு முதற் காரணமுஞ்சிவன். ஆன்மாக்களுக்கு அருள் செய்ய வேண்டுமென்னுஞ் சிவனது இச்சை காரணமாகச் சிவசக்தி பரந்து விரிதலால் சக்தியின் தோற்றத்துக்குத் துணைக் காரணமுஞ் சிவன். அழகான பொற்குட மொன்றிருக்கின்றது. அதற்கு நிமித்த காரணம் அதைச் செய்தோன். முதற் காரணம் பொன். துணைக்காரணம் அதைச் செய்வதற்கு உடபோகிப்பட்ட கருவிகள். குடம் உருவானவுடன் நிமித்த காரணமும், துணைக் காரணமும் அதைவிட்டு நீங்கி நிற்கும். முதற் காரணமாகிய பொன் அதை விட்டு நீங்காது.பொன்னின்றிப் பொற்குடமிருக்க முடியாது. குடத்தின் வடிவமின்றிப் பொன் மாத்திரம இருந்தால் அது பொற்குடமாகது. பொன்னும் குடத்தின் வடிவமும் ஒன்றாயிருப்பது போலவே எந்நிலையிலும் சிவமுஞ் சக்தியும் ஒன்றாயிருக்கும். சிவமுஞ் சக்தியும் ஒன்றைவிட்டொன்று நீங்கி நிற்கமாட்டா. ***"அருளது சக்தியாகும் அரன்றனக்கு, அருளையன்றித் தெருள் சிவம் இல்லை, அந்தச் சிவமின்றிச் சக்தியில்லை"*** என்கிறார் அருணந்தி சிவாசாரியார். சிவசக்தி அருள்வடிவமானது. சடசக்தி அருட்குணம் இல்லாதது. கடவுள் உண்டெனக கொள்வோர், அவர்கள் எந்தச் சமயத்தவரானாலும், அவர் ஆதியந்தம் இல்லாதவர்-என்றுமுள்ளவர் என்பதை ஒப்புக்கொள்கின்றார்கள். ஒரு நாமமும் ஓருருவமும் இல்லாத கடவுளுக்குச் சிவனென்று பெயரிட்டால், சிவன் என்றுமுள்ளவரென்பதை எவருமே ஏற்றுக் கொள்ளவேண்டும். சிவம் என்றுமுள்ளதெனவே சிவ சக்தியும் என்றும் உள்ளது.

சடசக்தி என்றுமுள்ளதல்ல, முடி வில்லாற்றலு டையதல்ல. அது ஆக்கப்ப டுஞ்சக்தி. அழிந்து போகுஞ்சக்தி. மின்சக்தி உற்பத்தி

செய்யப்படுகின்றது. உபயோகிப்பதனால் அது அழிந்து போகின்றது. அதை அளவையால் அளந்தறிய முடியும். சிவசக்தி அளந்தறிய முடியாதது. மன வாக்குக் கெட்டாதது.

பூமிக்கு ஈர்ப்புச் சக்தி இருக்கிறது. அச் சக்தி ஒரு வரையறைக்குட்பட்டே செயற்படும். அவ் எல்லைக்கப்பாலுள்ள பொருள்களைப் பூமியின் ஈர்ப்பு சக்தியால் இழுக்க முடியாது.

சூரிய ஒளி பூமியின் ஒரு பகுதியில் விழும்போது மறு பகுதி இருளாகும். சூரிய ஒளி பூமியெங்கும் வியாபிக்குமானாலும் சம காலத்தில் அது பூமியெங்கும் வியாபகமாயிருக்கமாட்டாது. சிவசக்தி சமகாலத்தில் பிரபஞ்சமெங்கும் வியாபித்திருக்கும். அது நுணுக்கரிய நுண்ணியதாய் எதையும் ஊடுருவி நிற்கும்.

ஒளியைத் தரும் சூரியன் ஏற்றிய விளக்கு ஒளிர்ந்து கொண்டு இருப்பது போர ஒளியுடன் இருக்கின்றான். ஒளியை ஒடுக்கும் ஆற்றலோ, ஒளியைத் தோன்றச்செய்யும் ஆற்றலோ சூரியனுக்கில்லை. மகா சங்கார காலத்தில் பிரபஞ்சம் முழுவதும் ஒடுங்கும் போது சூரியனுஞ் சிவசக்தியால் ஒடுக்கப்படுகின்றான். மீண்டும் புதுச் சிருட்டி தொடங்கும் போது சூரியனும் தோன்றுகின்றான். இவ்வாறே இயற்கைச் சக்திகளெல்லாம் சிவசக்தியாற் தோற்றுகின்றன.

“ அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியினிற் றண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத் தனைத் தவ்வயின் அடைத்தோன் ..”
திருவண்டப்பகுதி)
என்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்

சடசக்தி தான் என்ன செய்கின்றதென்பதை அறியாது. சிவசக்தியே அறியுஞ்சக்தி. அதுவே அறிவிக்குஞ்சக்தி. சிவசக்திக்கு சடசக்திக்கு மிடையிற் பல வேறுபாடுகள் இருப்பினும் சிவசக்தி அருளுருவாயும் இச்சா ஞானக் கிரியா சக்திகளாய் விரியும் இயல்புடையதாயும் இருப்பதையே இவ்விடத்தில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும்.

**If you would like your Kalasam to be sent to your home address, please fill in the form below and send it to us with your payment.**

கலசம்
KALASAM
இலவச காலாண்டிதழ்

## கலசம் உங்கள் வீடுதேடி வரவேண்டுமா?

**இப்படிவத்தை நிரப்பி அனுப்புங்கள்!**

பெயர்: ..........................................................................
முகவரி: ..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

Donation:£...............
Postage: £...............
Total £.

Kalasam
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Kalasam@hotmail.com

**Postage and admin**: **£10** (U.K/Europe); **£20** (Rest of the world) (இரு வருடங்களுக்கு)

# சைவ சித்தாந்தத்தில் சக்தி

உலக இயக்கம் அனைத்திற்கும் சக்தியே காரணம் என்பதை விளக்கும் வகையில் "சக்தியிருந்தால் செய் இல்லையேல் சிவனே என்று சும்மா இரு" என்று சொல்லும் பழமொழி ஒன்று தமிழில் உண்டு.

சிவம் சும்மா இருப்பது. சிவத்தையும் இயக்குவது சக்தியே என்பர் சிலர். சைவ சித்தாந்தம் சிவசக்தி பற்றிச் சிறப்பாகப் பேசுகின்றது.

தொழில் வேறுபாடட்டினாலே சிவசக்திக்குப் பராசக்தி, ஆதிசக்தி, இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்ற தொடக்கத்தனவாகப் பல பெயர்களுண்டு. இவற்றுட் பராசக்தி அருளைச்செய்யும். ஆதிசக்தி ஆன்மாக்களின் மலம் பக்குவப்படுவதற்காக ஆரணி, ரோதயித்திரி, ஜநநீ, என்னும் சக்திகளைக் கொண்டு ஏனைய நான்கு தொழில்களையுஞ் செய்விக்கும். இவ்வைந்து தொழில்களையும் நியமித்தும், அறிந்தும் செய்தும் அமர்கின்ற சக்திகளை முறையே இச்சா சக்தியென்றும் ஞானாசக்தியென்றும், கிரியாசக்தியென்றும் சொல்லப்படும்.

இவைகளேயன்றி ஈசானம் முதற் சத்தியோசாதம் ஈறாகிய பஞ்ச சக்திகளாயும், நிவிர்த்தி முதற் சந்தீய தீதை யீறாகிய பஞ்ச சக்திகளாயும், பிறவாயும் சிவசக்தி வரும்.

சிவபெருமானை அவரது அடியார்கள் சேர்வதற்குச் சக்திதான் துணை என்பர் உமாபதிசிவாசாரியார். சைவ சித்தாந்த நூல்கள் பதினான்கில் சித்தாந்த அட்டகம் என்று போற்றப்படும் எட்டு நூல்களைத் தந்தவர் உமாபதி சிவாசாரியார். அந்த எட்டு நூல்களிலே திருவருட்பயன் முக்கியமான ஒன்று. திருவருட் பயனிலே அவர்

"தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்"

என்று உமாபதி சிவாசாரியார் கூறுகிறார். தன்னிலைமையை நிலையான உயிர்கள் அடையச்செய்யும் சக்தியோடு பிரிவில்லாதவன் எங்கள் சிவபெருமான் என்கிறார் உமாபதி சிவாசாரியார். எனவே சக்திதான் உயிர்களைச் சிவத்தோடு சேரச்செய்கிறது என்பது சித்தாந்தக் கொள்கை. உலகியலில் தாய்தான் பிள்ளைக்குத் தந்தையைக் காட்டுபவள். தாய்தான் தந்தையின் பெருமையைப் பிள்ளைகளுக்குச் சொல்பவள். தாய்தான் தந்தையோடு பிள்ளைகளைச் சேரச்செய்பவள். அதனால் இது ஆன்மிகத்திற்கும் பொருந்துகிறது.

பிள்ளைகள் செய்கின்ற எந்த வகையான குற்றங்களையும் மன்னித்துப் பிள்ளைகளுக்கு அன்புகாட்டி உணவு ஊட்டி, அரவணைப்பவள் தாய். தாயன்பிலும் மேலான அன்பு இவ்வுலகில் இல்லை. அது போல் எல்லா ஜீவராசிகளுக்கும் தாயாகி விளங்கும் சக்தியே உயிர்களுக்குப், பாவங்கிலிருந்து மன்னிப்பளித்து இறைவனைச் சேரத் துணையானவளாகின்றாள். நல்வினை தீவினை ஆகிய இரு வினைகளையும் ஒர சேர மதித்து அந்த வினைகள் தன்னைப் பற்றாத வண்ணம் பற்றற்ற நிலையில் கடமை நோக்கோடு "நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்ற நிலையில் " ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே" என்ற உணர்வோடு நான் எனது என்ற நிலையைக் கடந்த காரியங்களைச் செய்பவர்களை விட்டு மலம் நீங்கும்.

அதாவது இருவினை ஒப்பு ஏற்பட்டு விட்டால் மலம ஆன்மாவை விட்டு நீங்கும். இது மலபரிபாகம் எனப்படும். இப்படி மலம் நீங்கிய பின் திருவருட்சக்தி ஆன்மாவிலே பதியும். இதுவே சக்திநிபாதம் என்பர் சித்தாந்திகள். எனவே திருவருட் சக்தி பதிதல்தான் ஆன்மாக்களின் சிவத்தோடு சேர்வதற்குரிய கடைசி நிலை.

# மனித வாழ்வில் ஜோதிடம் மாபெரும் பொக்கிஷம்


## ஜோதிடபூஷணம்

துன்னையூர் ராம். தேவலோகேஸ்வரக்குருக்கள்

நட்சத்திரங்களின் குண இயல்பு பற்றி தொடர்

**பூரட்டாதி நட்சத்திரம்**

இந்த நட்சத்திரத்தின் அதிபதிக்கிரஹம் குரு பகவான் இந்த நட்சத்திரத்தினுடைய முதலாம் இரண்டாம் மூன்றாம் பாதங்கள் கும்ப ராசியிலும், நான்காம் பாதம் மீனராசியிலும் அமைகின்றன. மிகவும் அழகான தோற்றம் உடையவர்களாக இருப்பார்கள். கல்வியில் நல்ல மேன்மை உடையவர்களாக இருப்பார்கள். கல்விக்கு உரிய தொழில் நிலை அமையக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். தாம் நினைத்த விடயத்தை சாதிப்பதற்காக எதையும் செய்யத் தயங்க மாட்டார்கள். மற்றவர்களின் பேச்சைக் கேட்கமாட்டார்கள். தமது நியாயத்திற்காக தார்க்கம் புரிந்து வாதாடுவதில் வல்லவர்கள். இவர்களின் குடும்ப வாழ்வை பொறுத்த மட்டில் இந்த நட்சத்திர அன்பார்கள் தாம் விரும்பியே திருமணம் செய்வார்கள். ஜாதக ரீதியில் குடும்பஸ்தான நிலைகள் சிறப்பாக அமைந்திருந்தாலும், இவர்களின் குடும்ப வாழ்வில் ஏதோ ஒரு வகையில் சிறுசிறு மனச்சஞ்சலங்கள், பிரச்சினைகள் என்பன தொடருகின்ற நிலை இருக்கும். ஒரு சிலர் நல்ல சமூக அந்தஸ்தைப் பெறும் நிலை கொண்டவர்கள். தாம் நினைக்கின்ற விடயங்களை சாதிப்பதில் மிகவும் வல்லவர்கள். யார் எதை சொன்னாலும் அவற்றையெல்லாம் அமைதியாக இருந்து கேட்டுவிட்டு பின்னர் தாம் நினைத்ததைத்தான் செய்வார்கள். இவர்களின் அதிபதி தெய்வம் சிவன், தெட்சணாமூர்த்தி. இவர்களுக்கு உரிய அதிஷ்ட இரத்தினக்கல் "புஷ்பராகம்" அதிஷ்ட நிறம் "மஞ்சள்" எல்லா வகையிலும் நல்ல திறமையுள்ள இவர்கள் மற்றவர்களையும் அனுசரித்து நேர்மையான செயற்திறன் கொண்டு காரியங்கள் செய்தால் பலவிதமான நன்மையும் சிறப்பும் வாழ்வில் பெறக்கூடிய நிலைகள் அமையும்



**உத்தரட்டாதி நட்சத்திரம்**

இந்த நட்சத்திரத்தின் அதிபதிக்கிரஹம் சனிபகவான். இந்த நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும் மீன ராசியிலேயே அமைகின்றன. பொதுவாகவே நியாயமான செயல் திறனைக்கொண்டு வாழ்வில் வெற்றி காண்பவர்கள். நீதி நேர்மைக்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள். பெற்றோர், உறவினர்களை மதிக்கும் பண்பும் மரியாதையும் உள்ளவர்கள். கலை ஆர்வம் மிக்கவர்கள். எல்லா விடயங்களையும் கற்றுத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கின்ற உணர்வு உள்ளவர்கள். சுதந்திர பிரியர்களாக

இருப்பார்கள். எந்த விடயத்திலும் தாமே முதன்மை பெற வேண்டும் என்கின்ற துடிப்பு கொண்டவர்கள். பிறர் உதவியின்றி சுயேற்சையாக வாழ வேண்டும் என்கின்ற எண்ணம் கொண்டவர்கள். இவர்களிடம் துணிச்சலோடு பிடிவாத குணமும் சற்று அதிகமாகவே இருக்கும். வாழ்வியலில் முற்பகுதியில் சிரமங்கள், கஷ்டங்கள் இருப்பினும் பெரும்பாலும் பிற்பகுதி வாழ்க்கை சிறப்பானதாக அமையக்கூடிய நிலைகள் உண்டு. சிலருக்கு குடும்பவாழ்வு சற்று மத்திமமான பலாபலன்களைக் கொடுக்கும் நிலை உண்டு. செய்கின்ற தொழில் எதுவாக இருப்பினும் அந்தத்தொழிலை முழுமையாக கற்று முறையாக செய்கின்ற திறமை உடையவர்கள். எல்லோரையும் அனுசரித்து செயற்படுகின்ற குண இயல்பு கொண்டவர்கள். உறவினர்கள், பிரியமானவர்களின் கஷ்டநஷ்டங்களில் பங்கு கொண்டு உதவி புரியும் மனப்பான்மை உடையவர்கள். இவர்களின் அதிபதித் தெய்வம் சிவன். இவர்களுக்கு உரிய அதிஷ்ட இரத்தினக்கல் "நீலக்கல்" இவர்களுக்கு உரிய அதிஷ்ட நிறம் நீலவர்ணம் பொதுவாக இந்த நட்சத்திர அன்பர்கள் வாழ்வு மற்றவர்களுக்கு ஓர் உதாரணமாக அமையும்.

**ரேவதி நட்சத்திரம்**

இந்த நட்சத்திரத்தின் அதிபதிக்கிரஹம் புதபகவான். இந்த நட்சத்திரத்தின் நான்கு பாதங்களும் மீனராசியிலேயே அமைகின்றன. பொதுவாக இவர்களின் குணஇயல்புகள் சற்று வித்தியாசமாக இருக்கும். நல்ல அறிவும், அழகும் நிறைந்தவர்களாக இருப்பார்கள். எடுக்கின்ற விடயங்ளை சரியாகச் செய்ய வேண்டும் என்கின்ற சிந்தனை கொண்டவர்கள் பேச்சுவன்மை மிக்கவர்கள். எந்த விடயமாக இருப்பினும் வாதாடி ஜெயிக்கும் தன்மை கொண்டவர்கள். பிடிவாதம் இவர்களுக்கு கூடவே பிறந்ததாகும். ஒரு விடயத்தை செய்வதற்கு இவர்களுக்கு கொடுத்தால் மிகச் சிறப்பாக தலைமைதாங்கி அதை செய்து முடிக்கும் ஆற்றல் கொண்டவர்கள். பழி, பாவங்களுக்கு பயந்து நடக்கின்ற சுபாவம் உள்ளவர்கள். ஆனால் உற்றார் உறவினர்கள் இவர்களோடு ஒட்டு உறவாக இருப்பது குறைவாகவே இருக்கும. மனதிலே ஒன்றை வைத்துக் கொண்டு வெளியிலே ஒன்றை பேசுகின்ற குணம் கிடையாது. எதுவா இருப்பினும் வெளிப்படையாகவே பேசும் குண இயல்பு கொண்டவர்கள். மிகவும் பொறுமை நிதானம் உள்ளவர்களாகவே இருப்பார்கள். அவர்களின் மனதிற்கு பிழையாக அமையும் காரியம் யார் செய்தாலும் அதைக் கண்டிக்கும் முதல் ஆளாக இருப்பார்கள். இவர்களுக்கு அதிஷ்ட ரத்தினக்கல் மரகதம். அதிஷ்டம் தரும் நிறம் பச்சை. இவர்களுக்கு உரிய அதிஷ்ட தெய்வம் மகாவிஷ்ணு. பலவிதத்திலும் வாழ்வில் வெற்றி பெறும ஆற்றல் இவர்களுக்கு உண்டு.

## உயிரின் மூன்று குணங்கள்:

சாத்விகம் (அமைதி)
இராசதம் (ஆதிக்கம்)
தாமதம் (மயக்கம்)

மாயையில் தோன்றி கரணங்களில் மலர்ந்தனவே இவை. எல்லா உயிர்களுக்கும் இம் முக்குணங்கள் உண்டு. ஆனால் அவை ஒரே அளவில் நிலையாக இருக்காது. எண்ணற்ற விகிதாசாரங்களில் கலந்து அடிக்கடி மாறும். மனிதர் குணங்கள் வேறுபட்டிருப்பதற்கு இதுவே காரணம்.


**சாத்விகம்-**
அமைதி மேல் ஓங்கி இருந்தால் சாந்தம் -பக்தி முதலியன தோன்றும்

**இராசதம்-**
ஆதிக்கம் மேலோங்கி இருந்தால் பற்றுள்ளம்-விடாமுயற்சி முதலியன தோன்றும்

**தாமதம்**
மயக்கம் மேலோங்கியிருந்தால் சோம்பல்-பாவச்செயல்-தூக்கம் முதலியன தோன்றும்

# கடவுள் பாதி மிருகம் பாதி

## சுவாமி சின்மயானந்தர்



அன்று உலகம் தோன்றிய முதல் நாள் உலகத்தில் இருக்கவேண்டிய சகல ஜீவராசிகளுக்கும் பகவான் ஓர் அட்டவணை தயாரித்துவிட்டார். அவற்றுக்கு ஆயட்காலம் எவ்வளவு என்பதை தீர்மானம் செய்ய வேண்டியிருந்தது. இறைவனின் ஆணைப்படி நாரதமுனிவர் ஒவ்வொரு ஜீவராசிகளையும் அழைத்து வந்தார். அவற்றிடமே அவை விரும்பும் ஆயுட்காலங்களைக் கேட்டு அப்படியே வரமும் கொடுத்து அனுப்பிவிட்டார் இறைவன். ஊர்வன, பறப்பன, புழு, பூச்சிகள் ஆகியவை எல்லாம் முடிந்த பிறகு மிருகங்களின் பங்கும் வந்து சேர்ந்தது.

"உங்கள் எல்லேருக்கும் முப்பது ஆண்டுகள் ஆயுள்?" என்று மொத்தமாக வரம் கொடுத்தார் இறைவன். அவை எல்லாவற்றுக்கும் மிகுந்த மகிழ்ச்சி.

கத்திக்கொண்டும், குதித்துக்கொண்டும் துள்ளி ஓடி ஊர்வலமாக உலகத்தை நோக்கி அவை புறப்பட்டன. கோடிக்கணக்கான ஜீவராசிகள் அப்படி ஆண்டவனின் அருளைப் பெற்றுப் புறப்பட்ட காட்சி பார்க்கப் பிரமாதமான ஒன்றாக இருந்தது.

"நாரதா! எல்லாரும் போய்விட்டார்களா?" என்று கேட்டான் இறைவன். எழுந்து வெளியே போய்ப் பார்த்து விட்டுத்திரும்பிய நாரதர் "இன்னும் நான்கு வகை ஜீவராசிகள் மட்டும் காத்துக்கொண்டிருக்கின்றன. அவை தங்களிடம் முறையிட விரும்புகின்றன!" என்றார் நாரதர். "அப்படியா? நான் கொடுத்த வரம் அவர்களுக்குத் திருப்தியாக இல்லையா? அப்படியானால் ஒவ்வொன்றாக வரச்சொல்லு. நான் விசாரிக்கின்றேன்" என்றார் இறைவன்.

முதலில் கழுதை உள்ளே வந்தது. இறைவனின் முன் நின்று கண்ணீர் விட்டது. "உன் குறையென்ன? சொல்லு! நான் போக்கி விடுகின்றேன்." என்றார் இறைவன். "ஆண்டவனே! தாங்கள் எதற்காக எனக்கு முப்பது ஆண்டுகள் ஆயுளைக்கொடுத்தீர்கள்? என் பிழைப்பு உங்களுக்குத் தெரியாதா? கொஞ்சம் வளர்ந்தவுடன் மூட்டைகளைச் சுமக்க வைப்பார்கள். சரியானபடி தீனி கிடைக்காது. சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோருடைய கேலிக்கும் ஆளாவேன். வயது முதிர்ந்து யாருக்கும் பயன்படாமல் உணவின்றி நலிந்து இறந்து போவேன். இந்த வாழ்க்கைக்கு எனக்கு முப்பது ஆண்டுகள் தேவையா? தாங்கள்தாம் அருள் கூர்ந்து இதைக் குறைத்து அருள வேண்டும்" என்றது.

"பயப்படாதே! உன் ஆயளைப் பதினெட்டு ஆண்டுகளாகக் குறைத்திருக்கின்றேன். மனிதன் உன்னைத் துன்புறுத்தினாலும் நீ சுத்தமான துணிகளைச் சுமப்பாய். உன் குரல் நல்ல சகுனமாகக் கருதப்படும்" என்று வரம் வரம்கொடுத்து அனுப்பினார் இறைவன். அடுத்ததாக நாய் உள்ளே நுழைந்தது. தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டது இறைவன் அதன் குறையை விசாரித்தார்.

"ஆண்டவனே! தாங்கள் அறியாததா? நான் இரவு பகலாகத் தூக்கமின்றி ஓடித்திருந்தாக வேண்டும் என் பெயரைத் திட்டுவதற்கேற்ற இழி சொல்லாக உபயோகிப்பார்கள். சிறுவர்களும் என்னைக் கல்லால் அடித்துத் துன்புறுத்துவார்கள். இந்த நாய் பிழைப்புக்கு முப்பது ஆண்டுகள் எதற்கு? குறைத்தருள வேண்டும் சுவாமி!" என்று புலம்பியது நாய்.

"அப்படியா? சரி! நீ பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்தால் போதும். அதிலும் நீ நல்லபடியாக நடந்து கொண்டால், உன்னை வீட்டில் வைத்து சோறு போடுவார்கள். நீ நன்றியுள்ள மிருகம் எனப் பெயர் பெறுவாய்" என்று ஆசி கூறி அனுப்பினார் இறைவன். நாய் வெளியே வரும் வரை காத்திருந்த குரங்கு உள்ளே ஓடி வந்து தலைக்கு மேல் கை கூப்பி இரண்டு காலில் நின்றபடி வணங்கிற்று. "உனக்கென்ன குறை?" என்று சிரித்துக்கொண்டே கேட்டார் இறைவன்.

"எனக்குமா முப்பது ஆண்டுகள் ஆயுள்? யோசித்துப்பாருங்கள் கடவுளே! என்னால் உழைத்துப்பிழைக்க முடியாது. விஷமம் செய்தே காலந்தள்ளியாக வேண்டும். தற்காப்புக்கா மரத்துக்கு மரம் தாவியாக வேண்டும்.

கிளைகளைப் பிடித்துக்கொண்டு தொங்க வேண்டும். முப்பது வயது வரையில் நீங்கள் என்னை வாழச்செய்து விட்டால் முதிய பருவத்தல் எப்படி இவற்றைச் செய்வேன்? கொஞ்சம் அருள் கூர்ந்து என் ஆயுட்காலத்தை குறையுங்கள்!" என்று கேட்டது குரங்கு."சரி உனக்கு இருபது ஆண்டுகாலம் போதும். ஆனால் நீ நல்லபடியாக பிழைத்துக்கொள்வாய். ஆண்டவனின் தொண்டன் என்று பூஜிக்கப்படுவாய். உன்னைத் துன்புறுத்துவதும் பாபமாகக் கருதப்படும். கவலைப்படாமல் போய்ச்சேர்!" என்று கூறி அனுப்பினார் கடவுள்.

கடைசியாக மனிதன் வந்தான். "முப்பது வயதுதான் கொடுத்திருக்கிறீர்கள், கல்விகற்கவும், வேலையில் சேரவும், மணம் செய்துகொள்ளவும் இந்த வயது சரியாகப் போய்விடும். அப்புறம் நான் வாழ்க்கையை அனுபவிப்பது எங்கே? நானும் என் துணைவியும் பெறும் குழந்தைக் காப்பாற்றுவது எப்படி? எனக்கு ஆயுட்காலத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டும் ஆண்டவனே!" என்று கேட்டான் மனிதன்.

கடவுளின் முகம் வாடிப்போய்விட்டது. நெற்றி சுருங்கிற்று. ஒரு கணம் மனிதனை அனுதாபத்துடன் பார்த்தார். பிறகு மனிதனை ஆசீர்வதித்து, "சரி அப்பா! உன் விருப்பப்படி நடக்கட்டும். உனக்குக் கொடுத்த முப்பது ஆண்டுகளுடன், கழுதையின் பதினெட்டு ஆண்டுகளையும், நாயின் பன்னிரெண்டு ஆண்டுகளையும், குரங்கின் இருபது ஆண்டுகளையும் சேர்த்துக்கொள். மொத்தம் எண்பது வயது கிடைக்கும். சமர்த்தியம் இருந்தால் அதற்குப் பிறகும் வாழ்ந்துகொள்!" என்றார் இறைவன்.

மனிதனுக்கு ஒரே சந்தோசம். கீழே விழுந்து வணங்கிவிட்டு ஓடிவிட்டான். பகவான் உற்சாகமின்றி உட்கார்ந்திருந்தார். நாரதர் அவரை வணங்கி "ஆண்டவனே! மனிதனின் வேண்டுகோள் தவறா? ஏன் இப்படி சேர்ந்து உட்கார்ந்து விட்டீர்கள்!" என்று கேட்டார்.

"ஆமாம் நாரதா! நான் கொடுத்த முப்பது ஆண்டுகளுக்குத் தான் அவன் சிரமமின்றி, உடல் ஆரோக்கியத்துடன் பிறர் உதவியை நாடாமல் வாழமுடியும். அத்துடன் அவன் பிழைத்துப்போயிருக்கலாம். தெரியாத்தனமாக மேலும் ஆயுள் வேண்டும் என்று கேட்டுவாங்கிக் கொண்டான். இப்போ நடக்கப்போவதென்ன? அடுத்த பதினெட்டு ஆண்டுகளுக்கு கழுதையைப் போல வேலையில் சுமையையும், அப்புறம் நாயைப் போலப் பன்னிரெண்டு ஆண்டுகள் சாம்பாதித்துச் சேமித்த பணத்தைக் காவல் காத்தும், பிறகு இருபது ஆண்டுகள் வயதான காலத்தில் குடும்பத்தார் சொன்னபடி-யெல்லாம் ஆடிக்கொண்டும் இருந்து உயிரை விடப்போகிறான்.

இது என்ன பிழைப்பு? முப்பது வயதில் அவன் ஞானம் பெற்று, மனப்பக்குவம் அடைந்து என்னை வந்து அடைந்திருக்கக்கூடாதா?" என்று பதில் சொல்லிப் பெருமூச்சு விட்டார் இறைவன்.

உண்மைதான்! இன்றும் மனிதன் பெரும்பாலும் கடைசிவரை மிருக உணர்வுகளுடன் பயனில்லாத வாழ்க்கைதானே வாழ வேண்டியிருக்கிறது? முப்பது வயதில் ஞானம் பெற்று முத்தியை தேடியவர்கள் யார்? மிகச் சொற்பமாகன ஆசாரிய புருஷர்களே அல்லவா?


*******

# சண்டேசுர நாயனார்

(மு.சிவராசா)

ஆன்மாக்கள் அடையும் முத்தி பதமுத்தி பரமுத்தி என இருவகைப்படும். பதமுத்தியாவன சாலோக முத்தி, சாமீப முத்தி, சாருபமுத்தி என் மூவகை. சாயுச்சியம் பரமுத்தியாகும். இவற்றுள் எந்த முத்தியடைந்த ஆன்மாவும் மீண்டும் பிறவி எடுப்பதில்லை. பதமுத்தி பெற்ற ஆன்மாக்கள் ஒரு காலத்தில் தாம் பெற்ற பதத்தினும் மேலான பதத்தை எய்தலாம். அன்றி பதமுத்திகளின் மேலான பரமுத்தி அடையலாம். பரமுத்தி என்பது இறைவன் திருவடிகளை அடைந்து பேரின்ப பெருவாழ்வில் என்றும் நிலைத்திருத்தலாம்.

அட்ட வித்தியேசுரர் முதலியோருள் ஓர் ஆன்மா இவ்வாறான பதம் ஒன்றிலிருந்து நீங்கும் போது அந்த இடத்துக்கு பக்குவநிலை அடைந்த இன்னோர் ஆன்மா நியமிக்கப்படலாம். சண்டேசுர பதம் என்பதும் அவ்வாறான ஒரு பதமே(பதவியே). சாலோப முத்தயாவது இறைவன் திருவோலக்கம் கொண்டுள்ள உலகத்தில் சென்றிருத்தல். சாமீபம்- இறைவனுக்குச் சமீபமாயிருத்தல், சாரூபம்- இறைவனுடைய திருவுருவததைப் பெற்று ஏதாயினும் ஒரு பதவியை வகித்தல். உதாரணமாக நந்தியெம்பெருமான் இறைவனின் உருவில் எம்பெருமானைத் தரிசிக்க வருவோரை ஒழுங்கு படுத்தி அவன் திருவுள்ளப்படி சந்நிதானத்திட்டு இட்டுச்செல்வது. சண்டேசுரர் பணி இறைவன் தம்மை வழிபடுவோருக்கு அருளுவதைப் பெற்று அவரவர்களுக்கு வழங்குவது. இதனாலேயே ஆலய தரிசத்தின் நிறைவில் சண்டேசுரரைத் தரிசித்து வழிபாட்டின் பலனை பெற்றுத் தருமாறு வேண்டுவது. சண்டேசுரரை வணங்காத வழிபாட்டால் பலன் கிடையாது என்பது நூற்றுணிபு. ஒவ்வொரு மூர்த்திக்கும் தனித்தனியான சண்டேசுரர் உளர். எடுத்துக்காட்டாக சிவபெருமானுக்குச் துவனிச்சண்டேசர், சக்திக்கு தாரிகாசண்டேஸ்வரி, விநாயகருக்கு கும்போதரசண்டேசர், முருகனுக்கு சுமித்திரா சண்டேசர், சூரியனுக்கு தேஜஸ்சண்டேசர்.



இனிப் பெரிய புராணத்தில் போற்றப்படும் சண்டேசுர நாயன-ார் வரலாற்றைப் பார்க்கலாம். திருச்சேஞ்ஞல் ஊரில் எச்சதத்தன் பவித்திரை என்ற பிராமணத் தம்பதியரின் புதல்வன் விசாரசருமன். முன் தவப் பயனாய் இளமையிலேயே வேதாகமங்களை உணர்ந்தவராய், பசுக்களின் பெருமையை அறிந்தவராய் சிவபூசை நாட்டம் உடையவராய் இருந்தார். அவ்வூர் அந்தணர்களின் பசுக்களை மேய்க்கும் ஓர் இடையன் ஒரு நாள் தன்னைக் குத்தவந்த ஈன்றணிய பசுவைத் தடியால் அடித்ததைக் கண்டார். அச் செயலைப் பொறுக்க முடியது பதைபதத்த விசாரசருமர் அவனை விலக்கி, பசுக்களை உடையவர்களின் சமமதம் பெற்று தானே மேய்ப்பான் ஆயினார். பசுக்களை விரும்புமட்டும் மேய விட்டு, நீர் ஊட்டியும் நிழல் காட்டியும் அன்போடு பராமரித்து வந்தார். அப்பசுக்கள் வழமையைக் காட்டிலும் அதிகமாகப் பால் சுரந்தமையால் உடையவர்கள் மகிழ்ந்தனர். விசாரசருமரின்(மாணி) அன்பு காரணமாக

அவர்தம் அருகில் வரும்போது பசுக்கள் தாமாகவே சுரந்து பாலைப் பொழிந்தன. அது கண்ட மாணி பால் சிவன் அபிஷேகத்துக்கு ஆகுமே என்று துணிந்து சிவபூசை செய்ய ஆயத்தமானார். மேய்ச்சற் தரை கிடந்த மண்ணியாற்றங் கரையிலே மணலால் சிவலிங்கம் அமைத்து கோயிலும், கோபுரமும் வகுத்து அருகில் நின்ற மரம் கொடிகளிலிருந்து பத்தர புஷ்பங்கள் பறித்து வந்து பசுக்கள் சொரியும் பாலைக்குடங்களில் ஏந்திவந்து அபிசேகம், பூசை ஆகியன செய்தார். அவ்வாறு பல நாட்கள் செய்கையில், ஒரு நாள் அது கண்ட ஒருவன், அதன் உண்மை அறியாதவனாய், பசுக்களின் உரிமையாளர்களுக்கு "மாணி பசுக்களைக் கறந்து மணல்மேல் ஊற்றி விளையாடுகிறான்" என அறிவித்தான். அவர்கள் எச்சதத்தனை அழைத்து அவ்வட்டுழியத்தைப் பற்றி முறையிட்டானர். அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாகக் கூறிய எச்சதத்தன் மறுநாள் மண்ணியாற்றங்கரை மரம் ஒன்றில் ஏறி ஒளிந்திருந்து மாணியின் அபிஷேக ஆராதனைகளைக் கண்டான். கோபத்துடன் இறங்கி வந்து மகனைக் கடும் சொற்களால் ஏசி, கோல் ஒன்றினால் அடித்தான். மாணியின் மனம் பூசையில் இலயித்து இருந்ததால் தந்தையின் ஏச்சோ, அடியோ அவரைப் பாதிக்கவில்லை. மேலும் அதிக கோபம் கொண்ட எச்சதத்தன் தனது காலால் குடங்களை இடறிப் பாலைச் சிந்தினான். அவ்வாறு செய்தவன் பிராமணனும், குருவும், தன்தந்தையும் ஆனவன் என்று அறிந்தும், அவன் செய்கை சிவ அபராதம் என்பதால், அவன் காலைத் துணிக்க கருதி தம்முன் கிடந்த ஒரு தடியை எடுக்க, அதுவே கோடரி ஆயிற்று. அதனால் தந்தையின் காலைத் தறித்தார். பூசைக்கு நேர்ந்த இடையூறு நீங்க, மாணி தொடர்ந்து பூசையில் இலயித்தார். அவ்வமையம் சிவபிரான் உமையோடும் தோன்றி மாணியைத் தமது திருக்கரத்தால் எடுத்து "இனி உமக்கு நாமே பிதா" என்று உச்சிமோந்தார். சிவன் தீண்டியமையால் மாணியின் திருமேனி சிவமயமாகப் பிரகாசித்தது. சிவன் மேலும் "உனக்கு நம தொண்டர்களுக்கெல்லாம் தலைவனாகும் சண்டேசுரப் பதம் தந்தோம்" என்றருளி தாம் தரித்திருந்த கொன்றை மாலையை அவருக்குச் சூட்டி, தம்முடன் அழைத்துச் சென்றார். சிவத்துரோகம் செய்த எச்சதத்தனும் மாணியால் தண்டிக்கப்பட்டதால் குற்றம் நீங்கிச் சுற்றத்துடன் சிவலோகம் சேர்ந்தான்.

ஆமலி பாலும் நெய்யும் ஆட்டிஅர்ச் சனைகள் செய்து
பூமலி கொன்றை சூட்டப் பொறாததன் தாதை தாளைக்
கூர்மழு ஒன்றால் ஓச்சக் குளிர்சடை கொன்றை மாலைத்
தாமநற் சண்டிக் கீந்தார் சாய்க்காடு மேவி னாரே

-அப்பர் தேவாரம்-

**ஈழத்து கீரிமலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமான் ஆலய பாடல்களின் ஒலிப்பேழை வெளியீடும் கலைமாமணி பூஷணி கல்யாணராமன் அவர்களது இசைக்கச்சேரியும் இலண்டன் சிவன் கோயில் விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.**

**காலம்: 29-07-2007**

**நேரம்: மாலை 5.00 மணி**

**இடம்: Londona Sivan Koil 4A Clarendon Rise Lewisham London SE13 5ES**

**தொடர்புகளுக்கு:**
**01277 223981 / 020 8468 7181**

# ஐயம் தெளிவோம்

## மகாமண்டலேசுவரர் சுவாமி மகேஷானந்தகிரி அவர்கள்

**கேள்வி:** *இன்றைய வாழ்க்கையில் நல்லவர்கள் பல சமயங்களில் சிரமப்படுவதையும், கெட்ட காரியங்களையே செய்து கொண்டிருப்பவர்கள் வசதியோடு வாழ்வதையும் பார்க்கின்றோம். இதைப்பற்றி ஆசாரிய புருஷர்கள் பலரிடமும் நான் கேட்டிருக்கின்றேன். அவர்கள் பூர்வஜென்ம வினையே இதற்குப் பின்னணியாக இருக்கிறது என்று சொல்லுகின்றார்கள். "சத்யமேவ ஜயதே" என்று சொல்லுகிறோமே அந்த சத்தியம் ஜெயிக்க வேண்டியதுதானே முறையாகும்.?*



**பதில்:** சத்தியம் ஜெயிப்பதுதான் நியாயமானது. ஆனால் அது எந்த அடிப்படையில் பார்க்கப்பட வேண்டும் என்பது தான் முக்கியம். பணவசதியும், வாழ்க்கை வசதியும், உலக இன்பங்களும் தான் நமது நோக்கம் என்றால் அதில் வெற்றி அடைய முடியாமல் போகக்கூடும். ஆனால் நல்ல பண்புகள் உருவாக உதவுவது, சமூகத்தையே மேம்படுத்த நல்ல ஒழுக்கம், நெறிமுறைகள் வளரப்பாடுபடுவது, எல்லோரும் மதிக்கக்கூடிய குடிமகனாக உன்னத இலட்சியங்களுடன் வாழ்வது போன்ற சிறப்புக்களை அடைவது நமது நோக்கமானால் நிச்சயமாக வெற்றி பெறுவோம். இது நிரந்தரமான வெற்றியாகவும் வாழ்க்கையில் அமையும் பொருளையும், வசதியையும், பதவியையும், அதிகாரத்தையும் தேடிப்பெறுவது தற்காலிகமான வெற்றிதான். அப்படிக்கிடைக்கும் உயர்வும், மதிப்பும் தற்காலிகமானதுதான். மக்கள் அவர்களிடம் சலுகைகளை நாடிப்போவார்கள். ஆனால் அந்தப் பதவியும் அதிகாரமும் போனதும் மதிப்பும் போய்விடும். அவர்களுடைய குழந்தைகளே கூட அவர்களை மதிக்க மாட்டார்கள்.

***கேள்வி*** *மதமும், நம்பிக்கைகளும் வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கும், வறுமைக்கும் பரிகாரம் அளிக்கவில்லையே? அந்த நிலையில் அதை நம்முடைய வாழ்க்கைக்குப் பொருத்தமான முக்கியமான அம்சமாக ஏற்றுக்கொள்ள இளைய தலைமுறையினர் மறுக்கின்றார்களே?*

**பதில்:** வறுமையைப் போக்குவது மட்டுமே மனித இலட்சியம் என்றால் பணக்காரர்கள் இன்று நிம்மதியாகவும் மகிழ்ச்சியுடனும் இருக்கிறார்களா? பணவசதி படைத்த நாட்டு மக்கள் அமைதியாக வாழுகிறார்களா? இல்லையே! ஆக எது முக்கியம்? மகிழ்ச்சியுடன் வாழ்வது தான் முக்கியம். அதற்கு மதம் வழிகாட்டுகிறது. உலகத்தில் எல்லோரிடமும் எல்லா ஜீவராசிகளிடமும் கடவுளைப் பார்க்க வேண்டும் என்று அது சொல்கின்றது. தன்னிடமே பரம்பொருள் இருப்பதை உணரவேண்டும் என்றும் அது சொல்கின்றது. அந்த உணர்வு வந்து விட்டால் மனிதன் தனது நிலையில் உயர்ந்துவிடுகின்றான். அவனுக்குத திருப்தியும், அமைதியும், மகிழ்ச்சியும் கிடைத்துவிடுகின்றன. தன்னுடைய சுயலாபங்களையே கருதி அதற்காகப் பிறரை வெறுத்தும் ஏமாற்றியும் பிழைத்து வருபவனுக்கு இவை கிடைப்பதில்லை. அவனுக்கு மதம் உதவ முடியாது.

***கேள்வி*** *மதம் இன்று மக்களைப் பிரிப்பதாகவும், அதன் அடிப்படையில் ஒருவரையொருவர் வெறுக்கவும் கலவரங்களை ஏற்படுத்தவும் காரணமாக இருக்கிறதே? அதுவே ஒரு தடைச்சுவராகவும் அமைந்து விடுகிறதே?*

**பதில்:** நாம் எந்த ஒரு கருத்தையும் எப்படி ஏற்கிறோம் என்பதும், எப்படி பயன்படுத்துகிறோம் என்பதும்தான் முக்கியம். அதை நாம் சரியாக உபயோகிக்காதது அந்தக் கருத்தின் தவறு அல்ல. பிராய்ட் (Sigmund Freud) தத்துவம் மனித வாழ்க்கையின் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைந்தது. கார்ல்மாக்சின் (Karl Marx) தத்துவம் மனிதர்களிடையே சமத்துவத்தை தோற்றுவிக்க உதவியது. ஆனால் அவை இன்று வேறு தவறான விளைவுகளை ஏற்படுத்திவிடவில்லையா? அதற்காக நாம் பிராய்ட்டையோ, கார்ல்மாக்சையோ குற்றம் சொல்லுகிறோமா? விஞ்ஞானரீதியாக எத்தனையோ தத்துவங்கள் வெளிவருகின்றன. அவற்றை நாம் அதன் பயனுக்காகத்தான் பாராட்டுகிறோம். அது ஜேர்மனிய விஞ்ஞானி சொன்னது. இது அமெரிக்க விஞ்ஞானி சொன்னது என்று இனம் பிரித்து அந்த அடிப்படையில் வேற்றுமையை உண்டாக்கிச் சண்டை போட்டுக கொள்ளுவதில்லை. இது மெய்ஞ்ஞானத்துக்கும் பொருந்தும். முற்காலத்தில் இந்து மதத்தைச் சேர்ந்த ஆசாரியர்கள் பிறமதத் தலைவர்களுடன் உரையாடிக் கருத்துக்களைப் பரிவர்த்தனை செய்து கொண்டிருக்கின்றார்கள். மதம் அவர்களைப் பிரிக்கவில்லை. கடவுள் ஒருவரே என்ற தத்துவத்தை உணரவும் அது வழிகாட்டி இருக்கிறது. இன்றைய நிலைக்கு நமது மனப்பான்மைதான் காரணம். மதம் அல்ல.

## தானதர்மங்கள்

பிரதிபலன் எதிர்பார்த்து அளிக்கப்படும் 'கொடை' தானம். எப்பலனையும் எதிர்பாராமல் செய்யும் எந்தவொரு உதவியும் தர்மம். நமது மூதாதையர்கள் 32 வகையான தர்மங்களைக் கடைப்படித்து வந்துள்ளனர்.

ஆதலர்க்கடைவு, அறுசமயத்தோர்க்கு அன்னம், ஓதுவித்தல், சிறைப்பட்டோருக்குத் தின்பண்டம், ஊனரைத் தேடி உணவளித்தல், கன்னிகாதானம், கண்நோய் அகற்றல், சிறுவர்கருச் சிற்றுண்டி, பசுவுக்கு வாயுறை, ஆவுறஞ்சு கல், ஆவினம் பாலுகச்சேவினம் விடுதல், குழந்தைகளுக்குப் பால், தர்மக்கல்யாணம், காதோலை ஈதல், நோய்க்கு மருந்திடல், மகப்பேறு பார்த்தல், எண்ணெய் ஈதல், கண்ணாடி கொடுத்தல், கடன் தீர்த்தல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், மடம் கட்டிடல், ஆடை அழுக்கு அகற்றல், மயிர் வினைஞர் நல்குதல், இல்லறம், வண்டிப்பாதை அமைத்தல், சாலை செப்பனிடல், சோலை வைத்தல், குடி தண்ணீர்க்குளம் வெட்டல், சிறகினம் சிறைநீக்குதல், செழுங்கிளை தாங்குதல்(மரம், செடி-கொடிகளைப் பேணுதல்) சுண்ணம், வெற்றிலை, பாக்கு அளித்தல், ஈமக்கடன் கழித்தல்

நம்மால் இத்தனை தர்மங்களையும கடைப்பிடிக்க முடியாதுவிட்டாலும் முடிந்த சிலவற்றையாவது கடைப்பிடிக்கலாம் அல்லவா?

# சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம்

தமிழ் மக்களின் பண்பாட்டிலே சமய உணர்வுகளும் நம்பிக்கைகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவ்வகையில் சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய வரலாற்றை எமது மக்கள் அறிய வேண்டுமென்பது எனது அவா. பல பேர் ஏற்கனவே அம்பாளின் அற்புதங்களை அறிந்திருப்பார்.



யாழ்ப்பாணமாவட்டத்திலே இணுவில், தாவடி, மானிப்பாய் ஆனைக்கோட்டை ஆகிய கிராமங்களுக்கு மத்தியில் உள்ளது சுதுமலைக் கிராமம். சைவத்தமிழ்ப் பாண்பாட்டை முறையாகப் பேணிவரும் சிறப்புக்குரியது. இங்கு கோயில் கொண்டுள்ள ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஈழத்திலே கீர்த்திபெற்ற சக்தி கோயில்களுள் ஒன்றாகும். சிவன்கோயில், முருக மூர்த்திகோயில், பைவவர் கோயில்களால் சூழப்பெற்று நீரோடை, வயல் பயிர்வளம் என இயற்கை வனப்புக்களுக்கு மத்தியில் எழுந்தருளி அடியார்கட்கு பல அற்புதங்களை செய்தும் செய்துகொண்டும் அம்பாள் அருள் சுரக்கும் தெய்வமாக விளங்குகிறாள். அம்பாளைச் சார்ந்திருந்த மக்கள் சைவ சீலர்களாவர். இம் மக்களின் ஆதரவுடன் பைவரவருக்கு நடாத்திய மிருகபலி பல ஆண்டுகளுக்கு முன்பாகவே நிறுத்தப்பட்டது, ஒன்றே குலமெனும் உயரிய நோக்குடன் இம்மக்கள் ஏனைய கோயில்களுக்கு முன்போ சாதிவேறுபாடின்றி கோயிலுக்குள் செல்ல எல்லா மக்களையும் ஒருவித எதிர்ப்பும் இன்றி பெருந்தன்மையுடன் அனுமதித்தனர்.

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். இக்காப்பிய நாயகி கண்ணகி. கண்ணகி மதுரையை தீக்கிரையாக்கிய பின் கோபாவேசத்துடன் தன்னை ஐந்தலை நாகமாக மாற்றி மதுரை மாநகரைத் துறந்து தெற்கு நோக்கிச் சென்று முதலில் நயினா தீவிலும் பின்பு களுவோடை, சுதுமலை, வற்றாப்பளை ஆகிய இடங்களில் தங்கினாள் என்பதாகக் கர்ணபரம்பரைக் கதை கூறுகின்றது.

இதே காலத்தில் சுதுமலை வாசி ஒருவர் உச்சிவெயிலில் வயல் உழுது கொண்டிருந்போது ஓர் மூதாட்டி வெண்ணிற ஆடையுடன் சோலைகள் மத்தியில் நிற்பதைக் கண்டார். அவர் தனது வேலையை விட்டுவிட்டு மூதாட்டியிடம் சென்றார். தனக்கு மிகவும் தாகமாக இருப்பதாகவும் குடிப்பதற்கு நீர் தரும்படியும் மூதாட்டி கூறினார். அவ்விடத்தில் சிறிது நேரம் மூதாட்டியை இருக்கும்படி கூறி, அருகேயுள்ள தனது வீட்டிலிருந்து விரைவாக இளநீருடன் திரும்பினார். மூதாட்டி அங்கில்லை. அவ்விடத்தில் எங்குமே அவரைக் காணவில்லை. மனச்சோர்வுடன் இருந்த அந்த உபாசகருக்கு அன்றிரவு அம்பாள் மூதாட்டிதோற்றத்தில் காட்சியளித்து தான் அன்று பகல் காட்சியளித்த அதேயிடத்தில் தன்னை ஆதரிக்குமாறு கூறி மறைந்தார். அந்த உபாசகர் இந்த அதிசய ஆக்ஞையை சுற்றத்தாருக்கும் கூறி, ஊர்மக்களையும் ஒன்று கூட்டி அம்பாள் தோற்றமளித்த இடத்தில் கொட்டில் அமைத்து அம்பாளின் உருவச்சிலை ஒன்று வைத்து "தங்குசங்களை" எனப் பெயரிட்டு வழிபட்டுவந்ததாகக் கூறப்படுகிறது. இவ்விடத்தில் "தங்குசங்களை" எனும் பெயருடன் கண்ணகியை நினைவு கூர்ந்து சுதுமலை மக்கள் வணங்கி வந்தனர். என்பதற்குச் சான்றாக இன்னும இவ்விடத்தில பெரிய ஆலவிருட்சங்களுக்கிடையே ஓர் அரசமரத்தின் கீழ் கல்லால் அமைக்கப்பட்ட ஒரு சிறுகோயிலில் அம்மன் காட்சி

தருகின்றாள். இக்கோயிலின் முன்பாக ஒரு கடம்ப மரம் இருக்கிறது.

இவ் அம்மனை பல நாமங்களால் அழைத்து வணங்கினார்கள். 1775ஆம் ஆண்டில் "பறுவதபத்தினி அம்மன் கோயில்" என கச்சேரியில் பதியப்பட்டிருக்கின்றது. பின் 1882ஆம் ஆண்டில் கல்லால் அமைக்கப்பட்டு "இராஜராஜேஸ்வரி அம்மன் கோயில்" எனவும் பின்னர் "மனோன்மணி அம்மன்" கோயில் எனவும் அழைத்து வணங்கியதாகக் கூறப்படுகின்றது. 1919 ஆம் ஆண்டில் இருந்தே இக்கோயில் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் கோயில் என அழைக்கப்பட்டு வருகின்றது.

இங்கு சுற்றியுள்ள விவசாய நிலங்களில் சங்குப்புற்றுகள் இருந்தமையால் "சங்களை அம்பாள்" என வணங்குவதை நான் அறிவேன். இது இன்றும் வழக்கத்தில் இருக்கிறது. அம்பாளின் அற்புதங்கள்: முன்னொரு காலத்தில் இக்கிராமத்தில் பேதி நோய் பரவிச் சிலர் இறந்தனர். அஞ்சிய மக்கள் அம்பாளுக்கு பொங்கல், குளிர்த்தி பூசைகள் முதலியவற்றைச் செய்து மனமுருகி வழிபட்டனர். அம்பாள் கருணை கொண்டு அந்நோய் பரவாது தடுத்தாட் கொண்டருளினார். அம்பாளுக்கு அர்ச்சனை செய்த ஒருவர் தான் கொடுத்த பழங்கள் சிலவற்றைக் காணவில்லையென மனம் வெந்து நின்றபோது காணாமல் போன பழங்கள் பாம்புகளாகக் காட்சி கொடுத்தன.

இக்கோயில் கொட்டில் கோயிலாவிருந்த சமயம் பெரு வெள்ளம் போட்டு கோயிலுக்குள் ஒருவரும் போகமுடியாமல் கோயிலை வெள்ளம மூடிவிட்டது. கோயில் பூசனார் அம்பாளுக்கு பூசைசெய்ய முடியாமையை நினைந்து மனமுடைந்து நின்றார். அன்றிரவு பெரியசத்தம் ஒன்று கேட்டது. அதன் பின்னர் அம்பாளின் வடக்கிலுள்ள வயல்வெளிக்கிணற்றின் ஊடாக வெள்ளம் சென்று வற்றியது.

இரு சிறுமிகள் கோயில் வழியால் வீடு நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம் ஒரு வயது முதிர்ந்த கிழவி, அவர்களை அழைதது்த் தனது தலையில் பேன் பார்க்கும்படி கேட்டார். அச்சிறுமிகள் மறுத்தும் அக்கிழவி அதில் ஒருவரை பலாத்காரமாக அழைத்துத் தலையைக்கொடுத்தார். சிறுமி கிழவியின் தலைமயிரை சிறிது பிரித்தபோது தலையில் கண்கள் இருப்பதைக் கண்டு மயக்கமுற்றார். எனது தயார் அம்பாளை "ஆயிரம்கண் உடைய அம்பாள் ஆச்சி" என்று வணங்குவதை நான் அறிவேன்.

ஒரு கர்ப்பிணிப்பெண், கணவன் அயலூருக்குச் சென்றவேளை பிரசவ வலி ஏற்பட்ட பொழுது தனக்கு பெண்துணை ஒருவருமில்லையே என அம்பாளை நினைத்து அழுது நின்றார். அவரது சிறிய தயார் போல் "அம்பாள்" காட்சிகொடுத்து பிரசவத்திற்கு உதவிகள் யாவும் செய்து மறைந்தருளினார்.

இவை யாவும் எமது முன்னோர்கள் வாய்வழி மூலம் கேட்டறிந்தவை. 1986ஆம் ஆண்டு கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாவதற்கு பத்துநிமிடங்கள் இருக்கும் விமானத்தில் இருந்து போடப்பட் குண்டு கோயிலுக்கு 10 அடி தூரத்திலுள்ள தீர்த்தக்கேணியில் விழுந்தது. அம்பாள் அருளால் அது வெடிக்கவில்லை. 15 ஆண்டுகளுக்குப் பின் கேணி துப்பரவு செய்யும் போதே அது தெரிந்தது. இது வெடித்திருந்தால் அன்று ஆலயமும் பக்தர்களும் அழிந்திருப்பார்கள். இதுவும் அவளின் திருவருளே.

இக்கோயிலில் வைகாசிப் பௌர்ணமி தினத்தில் தீர்த்தோற்சவம் நடைபெறக் கூடியதாக மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. பதினாறு நாட்கள் திருவிழா நடைபெற்று பதினேழாவது நாள் தேர்த்திருவிழாவும் பதினெட்டாம் நாள் தீர்த்தத்திருவிழாவும், இருபதாம் நாள் பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். அம்பாள் காட்சி தந்த தினத்தை நினைவு கூருமுகமாக அம்பாள் தேரில் வரும் போது கோயில் வீதிகளில் பொங்கல் செய்து மடைபரப்பி அம்பாளை வழிபடும் வழக்கம் இன்றும் நடைபெற்று வருகின்றது. அன்று இரவு "தங்குசங்களை கண்ணகி" அம்மனுக்கு பொங்கல் விழாவும் நடைபெற்று வருகின்றது.

***

# மூளும் வினை
## வாரியார் விருந்து



உயிர்களாகிய நாம் செய்தவினை, தீ சிறிது சிறிதாகக் கனைந்து பெருகி மூண்டு எரிந்து துன்பஞ்செய்வது போல் மூண்டு நம்மைத் துன்புறுத்தும். அதனால் வினைக்கு 'மூளும்வினை' என்று ஒரு பேரும் உண்டு. செங்கல் சூளை மூண்டெரிவது போல் வினை முண்டெரியும். "மூளும்வினைசேர" என்கின்றார் அருணகிரிநாதர்.

**"முன்செய்த தீவினையோ இங்ஙனே வந்து மூண்டதுவே" என்கிறார் பட்டித்தனத்தடிகள்.**

**'நோயெல்லாம் நோய்செய்தார் மேலாவாம் நோய்செய்யார்நோயின்மை வேண்டு பவர்'**
**-திருக்குறள்**

இந்த வகையில் சாமானிய உயிர்கட்குச் செய்த துன்பம் மறுபிறப்பில் வந்து எய்தும். சிறந்த சிவஞானிகட்குச் செய்த வினை அப் பிறப்பிலேயே மூளும் என வுணர்க.

கோசல நாட்டையாண்ட தயரதன் என்ற மன்னன், ஒரு நாள், தன் பரிசனர் சூழ யானை வேட்டையாடச் சென்றான். பகலில் யானைகள் கிடைக்கவில்லை. இரவில் நீர் பருகும்போது யானைகளைக் கொல்லக் கருதி, ஒரு நதித்துறையில், ஒரு புதரில் மறைந்து "சப்தவேதி" என்ற கணையை வில்லில் தொடுத்து நின்றான்.

காசிபன் மகன் விருத்தசேனன். விருத்தசேனனுடைய மகன் சலபோசனன். சலபோசன முனிவரும் அவர் மனைவியும் கண்ணில்லாதவர்கள். அவர்களுடைய மைந்தன் சுரோசனன். தாய் தந்தையரைக் காவடியாகச் சுமந்து வந்தான். தாய் தந்தையர்கள் நீர் வேண்டினார்கள். ஒரு மணல் மேட்டில் அவரை அமர்த்தி, சிறு வாயுள்ள கமண்டலத்தை நதியில் அழுத்தினான். குறுகிய வாயில் நீர் குடகுட என்ற ஒலியுடன் சென்றது.

அவ்வொலியைக் கேட்ட தயரதன் யானை நீர் பருகுவதாக நினைத்துப் பாணத்தை எய்தான். அக்கணை சுரோசனன் மார்பில் பட்டது. "சிவ,சிவா" என்று அலறி நிலத்தில் வீழ்ந்தான். இளம் பாலகனுடைய அழுகுரலைக் கேட்ட மன்னன் திடுக்கிட்டான். அந்தோ! கெட்டேன் என்று கூறி வில்லை எறிந்து விட்டு ஓடி, அச்சிறுவனை எடுத்து மார்மீது அணைத்து முகத்தல் நீர் தெளித்து, ஆடையினால் விசிறி உபசரித்தான். சுரோசனன் மெல்லக் கண் விழித்து "ஐயா! கண்ணில்லாத் தாய்தந்தையருக்குத் தண்ணீர் எடுக்க வந்த என்னை யாரோ ஒரு பாவி பாணம் எய்து கொன்றான். உயிர்பிரியும் போது தாய் போல் தண்ணளியுடன் ஆதரவு புரியும் தாங்கள் யார்?" என்று தழுதழுத்த குரலில் ஈசுரத்துடன் கேட்டான்.

அச்சிறுவனுடைய துயரத்தை கண்றணுற்ற தயரதனது கண்ணகள் நீர் பொழிந்தன. உள்ளந் துடித்தது. "மைந்த! நான் அயோத்தி மன்னன் தயரதன். யானை வேட்டையாட வந்தேன் பகலில் யானைகள் கிடைக்கவில்லை. இரவில் நதியில் நீர் குடிக்க வரும் என்று கருதி, புதரில் மறைந்து வில்லில் கணை தொடுத்து நின்றேன் நீ தண்ணீர் முகந்தபோது உண்டாய ஒலியை யானை என்று மாறியுணர்ந்து கணையை விட்டேன். அறியாமல் நேர்ந்த பிழை. என்னை மன்னிக்கவேண்டும்" என்றான். "வேந்தே! என்வினை என்னைக் கொன்றது. தங்களை யான் நோவமாட்டேன். கண்ணற்ற பிதா மாதாக்களை நினைந்து வருந்துகின்றேன்". "குழந்தாய்! உன்பிதா மாதாக்களை கண்ணை இமைகாப்பது போல் நான் காத்தருளுவேன் நீ வருந்தற்றக!"
'சிவசிவ' என்று அம் மைந்தன் வாய் முணுமுணுத்தது. ஆவி பிரிந்தது.
தயரதன் கமண்டல நீரை எடுத்துக் கொண்டு, சுரோசனனுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிக் கொண்டு, சலபோசன முனிவர் இருகுமிடம் போய் வணங்கினான்.

"மகனே!ஏன் இத்தனை நேரம்?" "தபோதனரே'

அடியேன் தயரதன். அயோத்தியை ஆள்பவன். யானை வேட்டையாட வந்தேன். இரவில் நதித்துறையில் நீர் பருகும்போது கொல்லாம் என்று பதுங்கியிருந்தேன். தங்கள் திருக்குமாரர் நீர் முகப்பதைக் கேட்டு யானை-யெனக் கணை விட்டுவிட்டேன். அறியாமல் நிகழ்ந்த இந்தப் பெரும் பிழையை மன்னித்தருள வேண்டும். தங்கள் தவப் புதல்வர் வானுலகம் போந்தார். கருணைக்கடலே!என்னைப் பொறுத்தருளும்".

முனிவர் அந்தோ என்று அலறினார். மன்னன் காவடியாக அவர்களைச்சுமந்து மகனுடைய உடலின் அருகில் விடுத்தான். மகனுடைய உடம்பைத் தடவித்தடவிப் பெரிதும் புலம்பியழுதார்கள். "மகனே! இன்றுதான் எங்கள் கண் போயிற்று. எங்களை இரவு பகலாகக் காத்து உதவினாயே. கண்மணி! இனி எப்பிறப்பில் உன்னைக் காண்போம்? ஆ! ஆ! எங்களை விடுத்துச் சென்று விட்டனையோ? "அரசனே நாங்கள் அந்தணர்கள். உன்னைச் சீறுவதில் பயன்யாது? சிலகாலம் சென்றால், உனக்கு நான்கு புதல்வர்கள் பிறப்பார்கள். எந்தப் புதல்வன்மீது அதிகப் பிரியம் கொண்டிருக்கின்றாயோ அப் பிரிய மகன் பிரிய, நின் உயிர் பிரியும். புத்திரசோகத்தை அப்போது நீ நுகர்வாய்" என்று கூறி, முனிவரும் முனிவருடைய மனைவியும் விண்ணுலகெய்தினார்கள். அதுகண்டு மன்னன் தாங்கமுடியாத வேதனையடைந்தான். நெடுங்காலத்துக்குப் பின் ராமர், பரதர், லட்சுமணர், சத்ருக்னர் என்ற புதல்வர்களைப் பெற்றான்.

ராமர் பிரிவினால் பெருந்துயருற்று மாண்டான். வினை மூண்டது.

பாண்டு மன்னன் தன் மனைவியர்கள் குந்தியுடனும், மாத்திரியுடனும் வேட்டையாடச் சென்றான். மனைவியருடன் வேட்டையாடிக் கொண்டிருந்த அவன் மட்டற்ற மகிழ்ச்சியால் மயங்கியிருந்தான். கிந்தம முனிவர் தன் மனைவியுடன் பொருந்த விரும்பி, மான் உருவம் எடுத்துப் பொருந்திக்கொண்டிருந்தார். பாண்டு மான் மீது கணை தொடுத்தான். மானின் மார்பில் கணைபட்டது. மிகப்பெருந் துன்பமுற்று மான் வடிவத்தை விடுத்த முனிவர் உருவங்கொண்டு "ஏ பாண்டு மன்னனே! நீ வேட்டையறத்தை விடுத்தனை. அறத்தினைக் கெடுத்தனை. இளங் குழவியான விலங்குகளையும், புணர்கின்ற விலங்குகளையும், கிழப்பருவமுள்ள விலங்குகளையும், நோய்வாய்ப்பட்ட விலங்குகளையும் கொல்லக்கூடாது என்பது வேட்டையறம். இதனை மறந்த நீ, என் மனைவியுடன் நான் மான் உருவங்கொண்டு இன்புறும் போது, என்னை வீணாக அம்புவிட்டுக் கொன்றாய். நீ உன் மனைவியுடன் இன்புறுங்கால் உன் உயிர்பிரியும்" என்று கூறிமாண்டார். அவர் மனைவியாருடைய ஆவியும் பிரிந்தது. பாண்டு நடுங்கி ஒடுங்கி அஞ்சினான். அவனுடைய வாழ்வின் சிகரம் இடிந்தது. தன்னுடைய ஆடம்பரமான அணிகலன்கள் ஆடைகளைக் களைந்து தன் பரிசனர்களை நகருக்கு அனுப்பினான். பாண்டுவின் துறவையறிந்து திருதராஷ்டிரன் முதலியோர் வருந்தினார்கள். பாண்டு முனிவனாக ஆனான். அவனுடைய மனைவியரும் துறவுக்கோலம் பூண்டு அவனுடைய தவநிலைக்கு உதவி செய்தார்கள். அவன் ஒரு மரத்தடியில் நிற்பான். தானே கனி உதிர்ந்தால் உண்பான். இல்லையேல் அடுத்த மரத்தடியில் நிற்பான். இப்படி எட்டு மரங்களிடம் போவான். எட்டு மரங்களிலும் கனியுதிரவில்லையானால், ஒன்பதாவது மரத்திடம் போகமாட்டான். எட்டுக் கவளம் உண்பான். ஒரு வேளையே உண்பான். அவனுடைய மனம் பற்றற்று நின்றது.

புறப்பகையை வென்ற அவன் அகப் பகையையும் வென்றான். பின்னர் தேவானுக் கிரகத்தினால் குந்திக்கும் மாத்திரைக்கும் ஐந்து மைந்தர்கள் பிறந்தார்கள். தருமர் பிறந்த பதினாறாவது ஆண்டில் விதி வயப்பட்டு அவன் ஒரு நாள் மாத்திரையை மருவினான். அந்தக் கணமே மாண்டான். வினை மூண்டுவிட்டது.

இராமதாசர் என்ற சிறந்த திருமாலடியார் பன்னிருவருடங்கள் சிறையில் இருந்து வேதனையுற்றார். ஏன்? முற்பிறப்பில் ஒரு கிளியைப் பற்றி, சிறகையரிந்து பன்னிரண்டு நாட்கள் கூட்டில் அடைத்து வைத்தார். அவ்வினை மூண்டு மறுபிறப்பில் பன்னிரு ஆண்டுகள் சிறைத் துன்பம் உற்றார். ஆதலால் அவரவர் செய்த வினை அவரையே சாரும். செய்வினை மூண்டு உரிய காலத்தில் திருவருள் நெறிப்படி செய்தவனையடையும். இது தான் நியதி. ஆதலால் ஒவ்வொருவரும், மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும் யாருக்கும் எந்த இடரும் புரியக்கூடாது.

***

# பொட்டு

பேரறிஞர் முருகவே பரமநாதன்



**பொட்டு- பூச்சி, சங்கை, தாலிப்பொட்டு, தானியப்பொட்டு, நுழைவழி, நெற்றித்திலகம், ஒருவகை அணி, துளி, தானியங்களின் தோலோடு கூடிய சிறுதுகள்.**
**பொட்டுக்கட்டுதல்- தாலி கட்டுதல், தாசிகளைக் கோயிலுக்கு உரிமையாக்கும் சடங்கு.**
**பொட்டுக்குத்துதல்-திலகம் எழுதுதல், பச்சை குத்துதல்,**
**பொட்டுக்கேடு-சங்கைகேடு,மதிப்பை இழத்தல்.**
**பொட்டுத்தாலி-பொட்டாகாரத்தாலி.**
**பொட்டெழுதல் -அறிவுறுத்தல், பொட்டுப்பொட்டெனல்- ஒலிக்குறிப்புவகை.**
-மதுரைத்தமிழ்ப் பேரகராதி.

இப்படி பொட்டு என்னும் வார்த்தைப் பிரயோகம் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளமைவில் வழங்கக் காணலாம்.

எனினும் வாடிக்கையாகப் பொட்டு என்றால் நாம் கருதுவது நெற்றியில் வைக்கும் பொட்டையே. சைவசமயப் பெண்கள் வாழ்வோடும் வளத்தோடும் இல்லறம் கலக்கும்போது பொட்டோடும் பூவோடும் பொலிந்து வாழ்வதையே விழைவர். இந்தப் பொட்டு, பூ, மஞ்சள், குங்குமம் என்பன பெரிதும் மங்கலத்தையே குறிக்கும். எனவே பெண்மணிகளும்,ஆண்களும், குழந்தைகளும் எம் சைவாலயங்கள் செல்லும் போது பொட்டு அணிந்து கொள்வோம். புருவமும், மூக்கும் இணையும் இடத்தில் சந்தனம் போடுவது வழக்கம். இதை முச்சந்தி என்பர். முறையான சந்தனம், சந்தனமரக்கட்டையை அதற்கேயுரிய சந்தனக்கல்லில் தேய்க்கவரும். நீர், பன்னீர், அத்தர் என்பன விட்டு அரைக்கவரும் சந்தனமென்குறடுதான் தேய்ந்த காலத்தும் கந்தம் குறைவுபடாது. நெற்றியில் அணியும் சந்தனப் பொட்டின்மேல் குங்குமம் வைப்பர். சந்தனம் சிவம், குங்குமம் சக்தி. சிவத்திலே சக்தி பதிதல் சந்தனம் போடல்.

'ஆளான அடியவர்க்கு அன்பன் தன்னை
ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்க
தாளானை தன் னொப்பாரில் லாதானைச்
சந்தனமும் குங்குமமும் சாந்துந் தோய்ந்த
தோளானை'.....

என அப்பர் சுவாமிகள் பாடினார்

அம்பாளாளைக் குங்குமத்தாயென அழைப்பர். நினைத்தது நேர்பெற நிறைவுற அம்பாளுக்குக் குங்குமத்தால் அர்ச்சனை செய்வர். ஆலயங்களின் வெளியே நடக்கும் திருமணம், பூப்புனிதநீராட்டு வைபவம், பொதுக்கூட்டம் போன்ற நிகழ்ச்சிகளிற் சந்தனம், குங்கும் முக்கிய இடம்பெறக் காண்கின்றோம். கிறீத்தவர்கள் திருமண வைபவத்தின்போது மங்கலத்தில் சின்னமாகச் சந்தனத்தைப் பயன்படுத்துவர்.

பெண்கள் உச்சிவகிடு என்று அழைக்கும் இடத்திற்று குங்குமம் வைப்பர். உச்சி நடுவில் போடும் கோட்டுக்கு வகிடு என்று பெயர். இதுதான் சீமந்தம். பெண்களுக்கு தெய்வசாந்நித்தியம் உள்ள இடம் சீமந்தம். பூவோடும், பொட்டோடும் மகளிர் இந்த இடத்திற்கு குங்குமம் அணிவர். திருமகள் வாழும் இடங்களில் இதுவுமொன்று. தமிழகத்தில் ஆண்கள் நெற்றியில் குங்குமம் அணிவர். ஆக மங்கலத்தின் சின்னம் குங்குமம், சந்தனம் அணிதல்.

இப்பாரம்பரிய வழக்கம் இன்று நம்மை விட்டுத் தூரதூர நகரக் காண்கின்றோம். அதை அநாகரிகமாகக் கருதுவர். ஒட்டு மொத்தமாக இது "மொட்" இல்லையெனக் கருதுகிறார்கள்.

இன்று குங்கும் வைப்போர் அருகிப்போயினர். பல வர்ணமான ஒட்டுப்பொட்டுக்கள் வனிதையர் நெற்றியை அலங்கரிக்கின்றன. மணப்பெண் அலங்காரங்களும் சைவ பாரம்பரியங்களை கைநெகிழவிட்டுவிட்டன. பெண்கள் தாம் குளிக்கையிற் பொட்டை உரித்துக் கண்ணாடியிலோ சுவரிலோ ஒட்டிவிட்டு குளித்துமுடிந்ததும் அதை மீளவும் ஒட்டிவிடுவர். இவர்கள் தான் இப்படிச் செய்கிறார்கள் என்றால் ஐயர்மாரும் இந்தச் செயற்கைப்பொட்டைத் தெய்வத திருமேனியிகளில் ஒட்டுவர். இது விதிக்கு அமையாது. இன்னும் ஒருபடி மேலே மலர்மாலைகள் கானகம் சென்று விட்டன. எல்லாம் செயற்கை மாலையையே இறைவன் விரும்புகின்றான். எல்லாமே கடதாசி மாலைகள். பிளாஸ்டிக் பொலித்தீன் மாலைகள். பிறதேசங்களில் இருந்து இறக்குமதியாகின்றன. இந்த அளவு சமயம் (சைவ,இந்துசயமங்கள்) கீழ்த்தரமாய் விட்டமை யாவருமறிந்த உண்மை. ஆனால் எல்லோருமே **மவுனசாட்சியாய்** விட்டனர்.

கந்தர் அலங்காரத்தில் 'பொட்டு' பயின்றுவரும் பாடல் இது:

**பொட்டாக வெற்பைப் பொருதகந்தா**
**தப்பிப் போனதென்றற்**
**கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்**
**பட்டா ருயிரைத்திருகிப் பருகிப் பசி தணிக்குங்**
**கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே**
(34ஆம்பாடல்

பொட்டு-துவாரம், ஓட்டை, கண்டாயம்

கிரௌஞ்ச மலை முழுதும் அழியும்படியாக அதனுடன் போர்புரிந்த கந்தப்பெருானே? பெரும் காமதாகம் கொண்டவரின் உயிரைத் திருகிஎடுத்து அவரைப் பருகிப் பசியாற்றிக் கொள்ளும் வாளும், வேலும் போன்ற கண்களையுடைய விலைமாதரின் வலையில் அகப்பட்டு கட்டுண்டது எனது மனம். அடியேனின் மனதை விட்டு அகன்றுவிட்ட பக்தியுணர்வுக்கு மட்டும் எட்டுகின்ற மெய்யறிவைத் தந்து காம இச்சைகளில் இருந்து எம்மை மீட்டு உய்விப்பீர்களாக.

எம் சைவ பாரம்பரியங்கள் எமது முதுசொம் என்பதை உணர்ந்து வாழ்வோமாக!

***

**கலசம் ஐப்பசி கார்த்திகை மார்கழி இதழ் சங்கத்தின் முப்பதாவது ஆண்டு நிறைவு விழா சிறப்பிதழாக வெிவரவுள்ளது.**

**அதனைத் தொடந்து தை மாசி பங்குனி (2008) இதழ் சிவலிங்கத் தத்துவ சிறப்பிதழாகவும் வெளிவரவுள்ளது.**

**சித்திரை வைகாசி ஆனி (2008) இதழ் நடராஜர் தத்துவ சிறப்பிதழாகவும் வெளிவரவுள்ளது.**

**வாசகர்கள் இவ்விதழ்களுக்கேற்ப ஆக்கங்களை அனுப்பிவைக்கவும். தகுதியானவை பிரசுரிக்கப்படும்**


CAPITAL AUTOS LTD
www.capitalautos.com
* Accident Repair Centre
* General Servicing
* Repairs to all makes & models
Fiesta
New MOT Station Open
• Fully Equipped MOT
• Accident Repair Centre
• Insurance Repairs Welcome
• Recovery Service
• Approved Insurance Repairers
• Courtesy Vehicle Available for most Repairs
• Professional, Friendly Service & Advice
• Collection & Delivery within the Local Area
Audi Specialist
CAPITAL AUTOS LIMITED
Tel: 020 8470 4789 / Fax: 020 8472 2147
51A Milton Avenue, Eastham, London E6 1BG
BMW
Mercedes
Vauxhall
Honda
Volkswagen
Nissan
Ford
MOT £10 Off

# திருவருள் மிகு என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

இப்பூவுலகில் உள்ள சகல ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி தனுகரணபுவன போகங்களை தந்தருளும் நோக்கில் ஆதிபராசக்தியான அன்னை சுயம்பு வடிவாக அலைகடலின் மத்தியில் தோன்றி வேண்டுவார்க்கு வேண்டுவதை வாரிவழங்கும் திருவருள் நோக்கில் குபேரபுரி எனும் இவ் இலண்டன் மாநகரில் வடக்கே என்பீல்ட் எனும் திவ்விய பதியில் மூர்த்தி தலம் தீர்த்தம் எனும் மூவகை சிறப்புக்களோடு உருவத்திருமேனி தாங்கி கோயில் கொண்டருளும் என்பீல்ட் நாகபூசணி அம்பாளின் திருவருளாளல் மகோற்சவப் பெருவிழா இவ்வருடம் 01-07-2007 ஞாயிற்றுக்கிழமை விநாயகர் திருவிழாவும், 02-07-2007 திங்கட்கழமை கெடியேற்றமும் 15-07-2007 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு தேர்த் திருவிழாவும் 16-07-2007 திங்கட்கிழமை விநாயகர் முருகன், நாராயணன் சண்டேஸ்வரி சகிதராய் அன்னை நாகபூசணி அம்பாளும் பஞ்சமூர்த்தியாக பவனி வந்துகாலை 11.00 மணிக்கு தீர்த்தோற்சவமும் இரவு கொடியிறக்கமும் சண்டேஸ்வர உற்சவமும் 17-07-2007 ஆடி முதலாம் நாள் செவ்வாயக் கிழமை பகல் 11.00 மணிக்கு 1009 சங்காபிசேகமும் இரவு ஊஞ்சலில் பூங்காவனமும் 18-07-2007 புதனன்று பகல் பிராயச்சித்த அபிசேகமும் இரவு பைரவர் மடையும் நடைபெற்று மகோற்சவம் பூர்த்தியாக- ின்றது.



அன்னையின் அருளாளல் 2002ஆம் ஆண்டு யூலை மாதம் 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஒரு தற்காலிக மண்டபத்தில் படத்துடன் பிரதி வெள்ளிக்கிழமைகளில் வழிபாடியற்றி 28-10-2002 அன்று அம்பாளின் திருவருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 07-092003- அன்று அடியார்களின் போருதவியாலும் அம்பிகையின் திருவருளாலும் தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் விநாயகர், முருகன், சிவன், தட்சணாமூர்த்தி நாராயணன் நவக்கிரஹதேவர்கள், வைரவர் முதலான பரிவார மூர்த்திகளுக்கும் அம்பாளுக்கும் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் நடைபெற்று தினம் ஆறுகால பூசைகளும் நித்திக நைமித்திக காமிய வழிபாடுகளும் நடைபெறுகின்றன. அம்பாளின் திருவருளால் வசந்தநவராத்திரி, சாரதா நவராத்திரி, கேதார கௌரிவிரதகாலத்தில் அம்பாளுக்கும் சிவனுக்கும் தனித்தனியாக இலட்சார்ச்சனை நடைபெறுவது இவ்வாலயத்திற்கே உரிய தனிச்சிறப்பு.

பிள்யைார் பெருங்கதை, திருவெம்பாவை, மகா சிவாராத்திரி, வளர்பிறை தேய்பிறை ஏகாதசி நாட்களில் அபிசேகம், பிரதோச கால சேவை, ஒவ்வொரு மாதமும் கார்த்திகை நட்சத்தரத்தில் முருகப்பெருமானுக்கும், விநாயகப் பெருமானுக்கும் வளர்பிறை சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி நாட்களில் விசேட அபிஷேக ஆராதனைகள் என்பவனவும் சிறப்பாக நடைபெறுகின்றன. சங்கடஹர சதுர்த்தி நாட்களில் அன்று ஆலயத்தில் அடியார்கள் தாங்களாகவே விநாயக பூசை செய்து வழிபடுவது தனிச்சிறப்பு.

மாதந்தோறும் பௌர்ணமியன்று அடியவர்கள் 108 தடவை அம்பாளை கிரிவலம் செய்து வழிபடுவதும் ஸ்ரீ சக்கர பூசை இடம்பெற்று அம்பாள் வீதியுலாவரும் கண்கொள்ளாக் காட்சியும் அற்புதமாகும். திருவாடிப்பூரம், வரலட்சுமி விரதபூசை என்பனவும் சிறப்பாக நடைபெறும் ஆலயம் என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம் ஆகும்.

2004ஆம் வருடத் தமிழ்ப் புத்தாண்டு முதல் பிரதி செவ்வாய் தோறும் ஐந்துதலை நாகத்தோடு கூடிய நாகம்மைக்கு அடியவர்கள் தாங்களே

பால் அபிசேகம் செய்து அம்பாளுக்கு நெய் விளக்கேற்றி லலிதா நவரத்தினமாலை, எலுமிச்சை விளக்கு பாடல்களை பாராயணம் செய்துவரும் அடியார்கள் வேண்டுவதை அன்னை வாரிவழங்கிவருவது கண்கூடாகக் கண்ட உண்மை. குழந்தைவரம் வேண்டி வழிபாடியற்றிய பலதம்பதியினருக்கு அன்னை குழந்தைச் செல்வத்தை வழங்கியவள். என்பீல்ட் நாகபூசணி அம்பாளின் தெய்விகத் திருப்பணியை ஆற்றி வரும் என்பீல்ட் இந்து தமிழ்ச் காலாசார சங்கம் அன்னையின் பெரும்பணி மட்டுமன்றி பல சமூக பண்பாட்டு விழுமிய செயற்பாடுகளிலும் முன்னிற்கின்றது. வாரந்தோறும் ஆலயமண்டபத்தில் ஞாயிறுதோறும் மிருதங்கவகுப்புக்களும், புதன்தோறும் வயலின் வகுப்புக்களும், திங்கட்கிழமைகளில் உடற்பயிற்சி வகுப்புக்களும் வெள்ளிதோறும் பண்ணிசை வகுப்புக்களும், சனிக்கிழமைகளில் யோகாசன வகுப்புக்களும், ஞாயிற்றுக கிழமைகளில் விசைப்பலகை வகுப்புக்களும் நடைபெறுகின்றது. மேலும் சிறப்பாக தற்போது சைவ முன்னேற்றச் சங்கத்தினரின் ஆதரவில் பிரதி வெள்ளிக்கிழமைகளில் இரவு 8.00 மணிமுதல் 8.30 மணிவரை பெரியபுராண விரிவுரை சிறப்பாக நடைபெறுவதும் அம்பாளின் திருவருளாகும். இத்துணைச் சிறப்பு மிக்க என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பாளை தரிசித்து பேரானந்த பெருவாழ்வு வாழும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

நித்திய பூசை நேரங்கள்:
காலை 8.00 உஷத்காலப் பூசை
காலை 8.30 காலைசந்திப் பூசை
காலை 11.30 உச்சிக்காலப் பூசை
மாலை 5.00 சாயரட்சைப் பூசை
இரவு 7.30 இரண்டாம் சாமப்பூசை
இரவு 9.00 அர்ததசாமப் பூசை

ஆலயதரிசன நேரம்
திங்கள், புதன், வியாழன்
காலை 8.00 மணி முதல் மதியம் 1.00 மணிவரை
மாலை 5.00 மணி முதல் இரவு 9.00 மணிவரை

வெள்ளி, சனி, ஞாயிறு நாட்களில்
காலை 7.00 மணி முதல் மதியம் 2.00 மணிவரை
மாலை 5.00 மணிமுதல் இரவு 9.15 மணிவரை

செவ்வாய்க்கிழமைகளில் காலை 8.00 மணிமுதல் இரவு 9.15மணி வரை தரிசனம் செய்யலாம்.

**ஆலயபிரதமகுரு சிவகாமரத்தினம்**
**சிவஸ்ரீ. இராகுநாத. கமலநாதக்குருக்கள்**

# இறைவனின் தொழில்

"தொழுவார் அவர் துயர் ஆயின தீர்தல் உன் தொழிலே"
என்று சுந்தர மூர்த்தி நாயனார் அருளிய இறைவனின் தொழில்கள் ஐந்து

**1. படைத்தல் :**
கேவல நிலையில் கிடந்த உயிர்கள் உய்வதற்கு தனு, கரண, புவன, போகங்களை மாயையில் இருந்து தோற்றுவித்துக் கொடுத்தல்

**2 காத்தல்:**
தோற்றுவித்த தனு முதலியவற்றை நிறுத்தி உயிர்களுக்குப் பயன்படுமாறு செய்தல்

**3 அழித்தல்:**
வினை காரணமாக உயிர்கள் பல பிறவிகள் எடுத்து உழன்றதால் ஏற்பட்ட களைப்புத் தீரச் சற்று ஓய்வு தேவை என்று தனு முதலியவற்றை உயிர்களை விட்டுப்பிரித்தல்

**4. மறைத்தல்:**
(திரயோதனசக்தி) உயிர்கள் வேறு ஒன்றில் நாட்டம் செலுத்தாது உலக இன்ப துன்பங்களை அனுபவித்தல் மூலமே ஆணவமலத்தின் சக்தி ஒடுங்கும். அதனால் உயிர்களின் நாட்டத்தைத் தன்பால் ஈர்க்கக்கூடாது என்று இறைவன் தன்னைக் காட்டாது மறைத்தல்.

**5. அருளல்:**
ஆணவத்தின் சக்தி ஒடுங்கியவுடன் உயிர்களுக்கு இயல்பாக இறைவனை அடையும் விருப்பம் தோன்றும். அந்நிலையில் இறைவன் தன்னைக்காட்டி மலங்களை நீக்கி ஆட்கொள்வான்.

# என்பீலட் நாகபூசணி அம்மன் ஆலய 2007 மகோற்சவ காட்சிகள்













# தெய்வத்திரு நயினை சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் அவர்களுக்கு எமது அஞ்சலி வணக்கம்

இலங்கா புரியழகு பதியாகிடும்
இனிய நயினை மேவியருள்
மலங்க லகற்றிடு மணிபல்லவ
மலர் நாகபூஷணி தலத்தேயமர்
துலங்கு மாதீனகுரு வழித்தோன்றல்
தூய வேதநெறி பரமேஸ்வரக்குரு
அலங்கல் வாழ்வகற்றி தெய்வமாய்
அரனடி யேகினா ரஞ்சலியே!

இங்கித பேச்சும் இசைந்திடு
இனிய கிரியை நெறியோங்க
எங்குமே குடமுழுக்கு வுற்சமும்
ஏற்ற நெறியோ டாற்றியே
சங்கென முழங்கிடு மந்திரவொலியும்
சார்ந்த சிவாசாரிய பெருவடிவும்
பங்கய மாகிட்ட பரமேஸ்வரகுரு
பரமனடி யேகினா ரஞ்சலியே

வேதமொடு வாகமமும் புராணமும்
விரிந்த இதிகாச தோத்திரமும்
காதலொடு கற்றுணர்ந்தே களிப்புற்று
காவிய செயலாற்றி கருத்தேனின்று
போதகராய் பலகுருமாரை வரித்தே
பொக்கிஷ நூல்களும் தொகுத்தே
சாதனைக் குரமணி பரமேஸ்வரக்குரு
சங்கரனடி யேகினா ரஞ்சலியே

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



"செஞ்சொற் கவிதா சிரோண்மணி"
துன்னையூர் ராம்.
தேவலோகேஸ்வரக்குருக்கள்

# மிருதங்க அரங்கேற்றம்

ஈழம் யாழ்ப்பாணம் உரும்பராயைச்
சேர்ந்தவர்களும், சுவிற்சலாந்து
லுற்சேர்ண் மாநிலத்தில்
வசிப்பவர்களுமான
திரு திருமதி ஸ்ரீரங்கராஜா அவர்களின்
சிரேஷ்ட புத்திரன் செல்வன் ருக்ஷன்
ஸ்ரீரங்கராஜா அவர்களின்
மிருதங்க அரங்கேற்றம்
எதிர்வரும் 25-08-2007 சனிக்கிழமை
பிற்பகல் 3.00 மணியளவில்
நடைபெறவுள்ளது.





## மிருதங்க அரங்கேற்ற அழைப்பிதழ்

அன்புடையீர், வணக்கம்.

நிகழும் சர்வசித்து வருடம் ஆவணி மாதம் 8 ஆம் தேதி (25 - 08 - 2007) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில்

எமது புதல்வன்
செல்வன் **ருக்ஷன் ஸ்ரீரங்கராஜா**
அவர்களின்
மிருதங்க அரங்கேற்றம் நடைபெறவுள்ளது.

இவ்அரங்கேற்ற விழாவிற்கு தாங்கள் குடும்பசகிதம்
வருகைதந்து விழாவினைச் சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கிறோம்.

அரங்கேற்ற மண்டபம்
**Zentrum St. Michael,**
Blattenmoosstrasse 8, 6014 Littau

தங்கள் நல்வரவை நாடும்
**திரு. திருமதி ஸ்ரீரங்கராஜா குடும்பத்தினர்**
Maihof Str-24, 6004 Luzern

தொடர்புகளுக்கு
041/4204183, 078/7392802

மண்டபத்துக்கு செல்லும் வழி
Luzern Bahnhof - இல் இருந்து 12 இலக்க பஸ் மூலம்
11வது தரிப்பிடம் Michaelhof-இல் இறங்கவும்.

வாகனத்தில் வருபவர்கள்
Ausfahrt Luzern Zentrum எடுத்து
Littau நோக்கி பிரதான வீதியில் 5 நிமிட
காரோட்ட தூரத்தில் மண்டபம் உள்ளது.

# சுவிற்சர்லாந்தில் இடம்பெற்ற 11ஆவது உலக சைவமாநாடு காட்சிகள்

இம் மகாநாடு பற்றிய செய்தி 46ம் பக்கத்தில் உள்ளது.









# சுவிற்சர்லாந்தில் இடம்பெற்ற 11ஆவது உலக சைவமாநாடு காட்சிகள்









# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் நயினாதீவு









# நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் நயினாதீவு

இலங்கையில் வடபால் யாழ்ப்பாணத்திற்கு அருகேயுள்ள சப்த தீவுகளில் நடுநாயகமாகத் திகழ்வது நயினாதீவாகும். பாரம்பரியமான வரலாற்றுச் சிறப்பினைக் கொண்ட இத் தீவில் அறுபத்து நான்கு சக்தி பீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடத்தை அலங்கரித்துக்கொண்டு, தன் அருட்பிரவாகத்தால் அகிலத்து மக்களை எல்லாம் தன்பால் ஈர்த்து அருளாட்சி செய்து கொண்டிருப்பவள் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பிகையாகும்.

நயினாதீவுக்கு இடப்பட்ட பழைய பெயர் நாகதீவு அல்லது நாகத்தீவு எனத் தெரியவருகிறது. இலங்கை எங்கணும் உள்ள ஆலயங்கள் யாவற்றிலும் மிகப்பழமை வாய்ந்தது நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன ஆலயம் என்பது ஐயமின்றி அறியக்கிடக்கின்றது. நயினை ஆலயத்தின் கருவறையான மூலஸ்தானத்திலே ஐந்து தலை நாகமும் அம்பாளும் இணைந்த விக்கிரகம் உள்ளது. பல்லாயிரம் ஆண்டு பழமைவாய்ந்த சுயம்பு மூர்த்தங்களே இவை. நாகவழிபாட்டிலே தொடங்கிக் காலப்போக்கில் நாகபூஷணி வழிபாடகா வளர்ந்தது. அவ்வழிபாட்டு வளர்ச்சியின் மகோன்னத நினைவுச் சின்னமாக நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது. நயினைதீவு நாகேஸ்வரி அல்லது நாகபூஷணி அம்பாள் ஆலயம் எப்பொழுது தோன்றியது யார் தாபித்தது என்று அறியப்படாதப் புராதனமுடையது. இப்புனித ஆலயம் சரித்திர காலத்திற்கு முற்பட்ட நாகவழிபாட்டை எடுத்துக்காட்டும் சின்னமாக அமைந்துள்ளது. இலங்கையில் நாகவழிபாட்டுக்கு இப்புனித ஆலயத்தைப் போன்று தொன்மைவாய்ந்த ஆலயம் பிறிதில்லை எனலாம் மூலஸ்தான விக்கிரகத்தின் அமைப்பைப் பார்த்தால் அது பல்லாயிரம் வருடங்களுக்கு முந்தியதாகப் புலப்படுகின்றது. மூலஸ்தான விக்கிரகத்திற்குப் பின்புறம் உள்ள நாகபடம் பார்க்கப் பயங்கரமாக உள்ளது.

"இந்தியாவிலும் நாகவழிபாட்டுக்கே பிரத்தியோகமாகவுள்ளள இவ்வாறான புராதன கோயிலைக் காண்பதரிது. கலப்பற்ற தூய்மையான நாகவழிபாட்டுப் பிண்பினை நயினாதீவில் காணலாம். சரித்திர காலத்தற்கு எட்டாத காலத்தொடக்கமுள்ள கோயில் இது என்பது புலனாகின்றது.'' என்று இத்தலத்தைத் தரிசித்த தென்னிந்திய சிற்பசரித்திர வல்லுனராகிய எம். நரசிம்மன் அவர்கள் தனது கருத்தை வெளியிட்டிருக்கின்றார்கள். உயிருள்ள நாகபாம்பு வழிபாடும் நயினாதீவில் இருந்ததென, வரலாற்றாசிரியர் சி.எவ்.கோர்டன் கம்மிங் குறிப்பிட்டிருப்பதாக வண ஜேம்ஸ் காட்மன் என்பவர் எடுத்துக்காட்டியுள்ளார்.

விலை மதித்தற்கரிய மாணிக்கம் பதித்த அரியணை ஒன்று தேவலோக வேந்தனாகிய இந்திரனால் இங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது. இப்பெறுமதி வாய்ந்த அரியணைக்காக நாகமன்னர்கள் இருவர் போரிட்டதாகவும், இப்போர் நடந்துகொண்டிருந்த வேளையில் புத்தர்பிரான் வருகை தந்து, இவவரியணை இந்திரனால் புவனேஸ்வரி அம்பாளுக்கெனப் பிரதிஷ்டை செய்யப்பட்டதென்ற உண்மையினை எடுத்துரைத்து அன்னைக்குரிய இவ்வரியணையை வணங்கிச்செல்லுமாறு வேண்டி அவர்களைச் சமாதானப் படுத்தியதாகவும், அவர்களும் அவ்வாறே பகை நீங்கிச் சென்றதாகவும் கூறப்படுகின்றது. புத்தர் பிரான் இலங்கைக்கு மூன்று முறை விஜயம் செய்ததாகவும், மூன்றாவது தடவை இம் மணிபல்லவத்திற்கு வருகை தந்ததாகவும், அவரின் வருகைக்கு முன்பே இந்திரனால் புவனேஸ்வரி பீடம் இங்கு அமைந்திருந்ததாகவும், இப்பீடத்தைத் தேவர் கோனாகிய இந்திரன் வழிபட்டதாகவும் அறிய முடிகின்றது.



" பெரியவன் தோன்றா முன்னர் இப்பீடிகை
கரியவன் இட்ட காரணத்தாலும்" (25.54.55)

எனும் மணிமேகலைக் காப்பிய வரிகளால் இதனை உணரலாம்.

சிவனுக்குத் தில்லை, அண்ணாமலை முதலிய பஞ்சலிங்கத் தலங்கள் இருப்பது போல பராசக்திக்குக் குண்டலினி யோகத்திலுள்ள ஆறு ஆதாரங்களை உருவகப்படுத்தி ஆறு தலங்களை அமைத்த நம் ஆன்றோர்கள், நயினாதீவை மணிபூரகமாகப் பாவித்து அதற்கு மணிபீடகம் என்று திருநாமம் சூட்டியதாகவும் அறிகின்றோம். அது மட்டுமன்றி சக்தி பீடங்கள் அறுபத்து நான்கினுள் இது இலங்கையில் புவனேஸ்வரி பீடம் எனப் பெயர்கொண்டு இருப்பதும் குறிப்பிட வேண்டிய ஒன்றாகும்.

முன்னொரு காலத்தல் நயினாதீவில் உள்ள அம்பிகையை ஒரு நாகம் வழிபட்டதாகவும் பூசித்து வந்ததாகவும் வரலாற்றுச் சான்றுகள் உண்டு. ஒரு நாள் அந்த நாகம் அம்பாளைப் பூசிக்கும் பொருட்டு பூக்களைக் கொய்து கொண்டு, இவ்வாலயத்தின் வடபாற் கடலுக்கு அப்பால் உள்ள புளியந்தீவில் இருந்து கடலூடாக வரும் போது ஒரு கருடன் அதனைக் கொல்லும பொருட்டு எதிரில் வந்தது. கருடணைக் கண்டு அஞ்சிய நாகம் கடல் நடுவேயுள்ள கல்லொன்றில் சுற்றிக்கொண்டது. கருடனும் நாகத்தை விட்டகலாமல் எதிரேயுள்ள கல்லொன்றில் இருந்து. அக்கடல் வழியாக மரக்கலத்தில் சென்ற வணிகன் ஒருவன்(மாநாய்கன் என்பர் ஆய்வாளர்) அந்நாகத்தின் பயத்தினைக் குறிப்பாலுணர்ந்து மரக்கலத்தை நிறுத்தி, அக்கருடனை விலகிச் செல்லுமாறு கேட்டான். அவ்வேளை "உனது செல்வம் யாவற்றையும் கொணர்ந்து நாகம்மாள் கோயிலுக்குக் கொடுப்பாயானால் விலகிக்கொள்வேன்'' என்ற வாக்கு அசரீரியாகக் கேட்டது. வணிகனும் உடன்பட்டான் நாகம் தனது நன்றியைச் செலுத்தி நயினாதீவை அடைந்து அம்பிகையைப் பூசித்தது. வணிகனும் தனது நாட்டிற்குத் திரும்பினான். அன்றிரவு வணிகனும் மனைவியும் நித்திரை கொள்ளச் சென்றபோது ஒரு பேரொளி தோன்றி அவர்களின் கண்களைக் கூசச்செய்தது. அவர்கள் அத்திசைநோக்கிச் சென்ற போது நாகரத்தினக் கற்கள் தம் சயன அறையினுள்ளே இருப்பதைக் கண்டார்கள். நயினை அம்பிகையின் திருவருள் என்னே என வியந்து, நயினாதீவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார்கள். அவர்கள் நயினாதீவை அடைந்ததும், தீவின் வடகிழக்குக் கடற்கரையில் நாகம்மாளுக்கு ஆலயம் ஒன்றைக் கட்டுவித்தார்கள். ஏழு வீதிகளும் கோபுரமும் அமைத்தார்கள். நயினார்பட்டர் என்ற பிராமணக்குருவை பூசகராக நியமித்தார்கள். பூசகராக நியமிக்கப்பட்ட நயினார்பட்டர் நயினாதீவுக்குத தெற்கே மண்ணிப்புளி என்னும் இடத்தல் வாழ்ந்தார்கள். என்றும் அக்காணியே பின்னர் பட்டர்வளவு என வழங்கப்பட்டது என்றும் கூறுவர். நயினைப் பட்டரின் பெயரால் மணிபல்லவம் நயினாதீவு ஆயிற்று எனலாம். நயினார்பட்டர் ஆதிப்பூசகராக இவ்வாலயத்தற்கு அமைந்த காரணத்தால் நயினார்தீவு என்பது நாளடைவில் மருவி நானாதீவாக மாறிற்று என்றும் கொள்ளலாம். அவ்வாறே நாகர்



வழிபட்டதாலும், நாகம்பூசித்து வழிபட்டதாலும் நாகதீவு என்ற பெயரும் வந்திருக்கவேண்டும். மேற்குறித்த நாகம் பூசித்த கதைக்குச் சான்றாக நயினாதீவின் வடகடல் நடுவே இரு கற்கள் . இன்றும் தெளிவாகக் காணப்படுகின்றன. அவை"பாம்புசுற்றியகல்" "கருடன் இருந்த கல்" என்ற பெயர் கொண்டே இன்றும் புராதன வரலாற்றுச் சின்னங்களாக வழங்கப்பட்டும், வணங்கப்பட்டும் வருகின்றன. இவ் அம்பிகையியை நாகர் வழிபாட்டதாலும், நாகம் பூசித்து வழிபட்டதாலும் நாகேஸ்வரி, நாகபூஷணி எனும் பெயர் அமைந்தது என்றும் கூறுவர். அன்று தொட்டு இன்று வரை காலாதி காலமாக நடைபெற்றுவரும் யாகபூசையின் போது "நாகராஜேஸ்வரி மந்திரபுஷ்பம் சமர்ப்பயாமி" எனச்சொல்லப்பட்டு பூசிக்கிப்படுகிறது. ஆரம்பத்தில் நாகவழிபாடாக இருந்து நாளடைவில் நாகபூஷணி வழிபாடாக இவ்வழிபாடு வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்ற கருத்தும் இதனால் பெறப்படுகின்றது. யாழ்பாபணக் கச்சேரியில் சைவசமயக் கோயில்களைப் பதிவு செய்து வைத்திருக்கும் இடாப்பில் (இது 1788 ஆண்டளவில் தயாரிக்கப்பட்டது) இந் நாகபூஷணி அம்மன் ஆலயத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ள சில முக்கிய சில குறிப்புக்கள் வருமாறு-

1. இராமலிங்க இராமச்சந்திரரால் 1788இல் கட்டியது (கல்லுக்கட்டிடம்)
2. திருவிழா ஆண்டுக்கொருமுறை ஆனிமாதம் பத்துத்தினங்கள் நடைபெறும்.

புராதன பெருமை வாய்ந்த இவ்வாலயம் அன்று வணிகர்களின் பொருளுதவியினால் விஸ்தரிக்கப்பட்டு விளங்குவதைக் கண்ட போர்ததிக்கீசர் பொருளாசையாலும், பொறாமையாலும் மதக்காழ்ப்பாலும் இவ்வாலயத்தை அழிக்கத் தொடங்கினர். கோயில் அழிக்கப்பட்டது. (கோயிலை இடித்துப் பெறப்பட்ட கற்களைக் கொண்டு ஊர்காவற்துறையிலே கடற்கோட்டை கட்டப்பட்டது என்பர்) இது கண்டு சைவ மக்கள் மனம் வெதும்பினர். ஆலய உற்சவ அம்பாளை ஆலயத்தின் மேற்குப் பக்கமாகவுள்ள ஆலமரப் பொந்தில் வைத்து வழிபட்டு வந்தனர். "அம்பாள் ஒளித்த ஆல்" என இப்போதும் இம்மரம் வழங்கப்பட்டும், வணங்கப்பட்டும் வருகின்றது. கோயிலை இடித்தபோதும், அடியார்களின் அம்பாள் வழிபாட்டை நிறுத்தமுடியவில்லை. டச்சுக்காரர் ஆட்சியின் பின்னர் மீண்டும் நாகேஸ்வரி ஆலயம் சிறிய அளவில் கட்டப்பட்டது. காலத்துக்குக் காலம் இக்கோயிலில் அனேக திருப்பணிகள் நடைபெற்று வரலாயிற்று. இக்கோயிலின் பெருமைக்கமைய வானுற ஓங்கிய கோபுரம் ஒன்று கிழக்கு வாயிலில் அமைந்துள்ளது. இக்கோபுரம் 1935இல் கட்டி முடிக்கப்பட்டு கும்பாபிசேகம் நடைபெற்றது. கோயிலின் விமான புனரமைப்பு வேலை 1951இல் மேற்கெள்ளப்பட்டது. பாண்டிநாட்டுச் சிற்ப முறையில் அமைந்த விமானம் இங்கு அமைக்கப்பட்டது. விமான வேலைகள் முடிவடைந்த பின்னர் பரிவாரமூர்த்தகளின் பண்டிகைகளும் திருத்தயமைக்கட்டன. நன்கு புனரமைக்கப்பட்ட ஆலயம் 26-04-1951ஆம் திகதியன்று மகாகும்பாபிசேகத்தைக் கண்டது.

1957ஆம் ஆண்டு வெள்ளேட்டம் விடப்பட்டு 1958ஆம் ஆண்டின் தேர்திருவிழாவன்று திருவீதி உலா வந்த அம்பிகையின் சிறபச்சித்திரத் தேர் இலங்கையில் வேறெந்த ஆலயங்களிலும் அமைக்கப்படாத சிறந்தசித்திரத்தேராகும். இவ்வாலய வரலாற்றுச் செய்திகள் ஒவ்வொன்றையும் சிற்பங்களாக அழகு வடித்துப் பொருத்தி வடிவமைக்கப்பட்டது.

பின்னர் நடைபெற்ற திருப்பணிகளைத் தொடர்ந்து 1963ஆம் ஆண்டிலும் பின்னர் பிரமாண்டமான ஆலயத் தென்கோபுரம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து 1983ஆம் ஆண்டிலும் ஆலயத்திற்கு வருகை தரும் அடியார்களின் நலன்கருதி, ஆலய வடக்கு வீதியில் கல்யாணமண்டபமும், "இறைபயணிகள் இல்லம்" என்ற பெயர்கொண்ட அழகான மண்டபமும் அமைக்கப்பட்டன. பின்னர் நடைபெற்ற பாரிய திருப்பணிகளைத் தொடர்ந்து 1988ஆம் ஆண்டு மாகாகும்பாபிசேகம் நடைபெற்றது.

1960ஆம் ஆண்டு வரை இவ்வாலயத்தில் பத்து நாள் திருவிழாக்களே நடைபெற்றன. பின்னர் பதினாறு நாடகள் திருவிழாக்கள் நடைபெறத்

தொடங்கின. அதன் பிரகாரம் தற்போது வருடந்தோறும் ஆனிமாதத்தில் பதினாறு தினங்கள் மகோற்சவம் நடைபெற்று வருகின்றது. இவற்றில் கொடியேற்றம், கைலைக்காட்சி, மஞ்சம், பூந்தண்டிகை, சப்பறம், தோ், தீர்த்தம், பூங்காவனம் (கடல் திருவிழா) என்பன சிறப்பான உற்சவங்களாகும். இவ்வாலயத்தில் 1986ஆம் ஆண்டு நடைபெற்ற அசம்பாவிதத்தினால், அம்பிகையின் சித்திரத் திருத்தேர் தவிர்ந்த ஏனைய பிள்ளையார், முருகன் தேர்களும் அம்பிகையின் திருமஞ்சமும் அளிக்கப்பட்டன. பிள்ளையாருக்கான புதிய சித்திரத்தேர் அமைக்கப்பட்டு 1998 இல் வீதி வந்தது. தொடந்து 1999இல் முருகனின் புதிய சித்திரத்தேர் திருவீதி வலம் வந்தது. அம்பிகைக்கான அழகிய திருமஞ்சம் 2000 ஆம் ஆண்டு மகோற்சவத்தின் போது திருவீதி வலம் வந்தது.

நீண்ட நாட்களாக பிள்ளைப்பாக்கியம் இல்லாதவர்களுக்கு இவ் ஆலயத்தல் நாகசாந்திக் கிரியைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இப்பெருஞ்சாந்தி கடல் நடுவே அமைந்துள்ள சமுத்திர மண்டபத்தில் நிறைவேற்றப்பட்டு உரியவர்கள் சமுத்திர தீர்த்தமாடியபின் அம்பிகையின் அருளாசி வேண்டி நாகப்பிரதிஷ்டை செய்து பிரார்த்திக்கப்படுகின்றது.

வேப்பமரத் தோப்பு நிழல் கோயில் வித்தகியாக அம்பாள் வீற்றிருந்த போதும், இவ்வாலயத்தின் தலவிருட்சமாகத் திகழ்வது வன்னிமரமாகும். ஆலயத்தின் பிரதான கிழக்குவாயில் கோபுரத்திற்கு அருகே தென்புறமாகப பண்டுதொட்டு இன்று வரை ஒரே மாதிரியான தோற்றத்துடன் காலத்தைக் கடந்து நின்று காட்சி தந்து கொண்டிருக்கின்றது இத் தலவிருட்சம். இது அடியார்கள் வணங்கிச் செல்லும் வகையில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நயினாதீவு சுவாமியார் என ஈழத்து மக்களால் போற்றப்படும் முத்துக்குமார சுவாமிகள்(முத்துச்சாமியார்) அவர்களின் விருப்பத்திற்கும் முயற்சிக்கும் வழிகாட்லுக்கும் அமைய அமைக்கப்பட்டுள்ள"சித்தாமிர்த புட்கரணி" எனும் புனித தீர்த்தக்கேணியே இத்தலத்தில் புண்ணிய தீர்ததமாகும். மேற்குக் கரையோரமாக இது அமைந்துள்ளது. வருடாந்தம் ஆனிமாத மகேற்சவத்தைத் தொடர்ந்து ஆனிப் பூரணையில் அம்பாள் இப்புனித நீராடுவதற்கு எழுந்தருளிச் செல்லும் காட்சி மகவும் அற்புதமானது. மேலும் மாசி மகம் போன்ற ஏனைய விசேடதினங்களில் அம்பாள் சமுத்திர தீர்த்தமாடி அடியார்களுக்கு அருள்சுரக்கும் இடமும் உள்ளது. அதே போல் நாகதோஷ நிவர்த்திக்காகவும், சமுத்திர தீர்த்தம் ஆடுவதற்குரிய இடமும் உண்டு. பசிப்பிணி தீர்க்கும் நோக்குடன் அருட் கொடையாக ஆபுத்திரனுக்கு வழங்கப்பட்டதே "அமுதசுரபி" என்னும் அட்சய பாத்திரமாகும். இவ்வரலாற்றுச் செய்தியுடன் தொட்புடைய புண்ணிய தலமாகையால் மகோற்சவ காலங்களில் பொருந்திரளாகக் கூடும் அடியார்களின் பசிப்பிணி போக்கி"அமுதசுரபி" அன்னதான சபையினர் நிர்வாகத்தன்கீழ் அமுதசுரபி அன்னதான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. வருடந்தோறும் மகோற்சவ காலத்தல் இம்மண்டபத்தில் அன்னதானப்பணி மிகவும் சிறப்பாக நடை-பெற்று வருகின்றது.

*****



சைவ ஆலயங்களிலும்,
சமய விழாக்களிலும்
**நந்திக் கொடிக்கு**
முக்கியத்துவம் கொடுப்போம்.
இதனை முன்னின்று நடத்தும்
திரு சின்னத்துரை தனபாலா
அவர்களை
நாம் பாராட்டுகின்றோம்.

# கண்ணதாசனின் சிந்தனைகள்

# பகுத்தறிவு



இன்று "பகுத்தறிவு பகுத்தறிவு" என்று பிரமாதமாகப் பேசப்படுகின்றது. அது ஏதோ பிறருக்கு இல்லாதது போலவும், சிலருக்கே சொந்தம் போலவும் முழங்கப்படுகிறது. 'நாங்கள் பகுத்தறிவுத்தீயில் புடம்போட்டு எடுக்கப்பட்ட மண்ணாங்கட்டிகள்' என்று சிலர் பேச நான் கேட்டிருக்கின்றேன். அதை இப்போது நினைத்தாலும் சிரிப்பு வருகின்றது, மனிதனை மிருகங்களில் இருந்து பிரித்துக்காட்டுகிற ஆறாவது அறிவுக்குப்பேரே, பகுத்தறிவு. இவள் தாய், இவள் தங்கை, இவள் தாரம் என்று கண்ணுக்கும், மனதுக்கும் சொல்வதே பகுத்தறிவுதான். ஆனால் துரதிஷ்டவசமாக இந்தப் பேதங்கள் தெரியாதவனே தன்னைப் பகுத்தறிவுவாதி என்று அழைத்துக்கொள்கின்றான். ஒரு மனிதன் என்னதான் குடித்திருந்தாலும் கூட தன் தாயின் அருகில் போய்ப் படுப்பதில்லை. அதுதான் மயங்கவைக்கும் போதையிலும் கூட, மிதமிஞ்சி நிற்கும் பகுத்தறிவு. ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரித்துக் காட்டுவதற்குப் பெயர் பகுத்தறிவு. அவ்வளவுதான்.

இதற்கென்ன தனிப்பட்டயம். தனிப்படை? உலகத்திலுள்ள கோடானு கோடி மனிடர்களுமே பகுத்தறிவாளர்கள்தான். கோயிலுக்குப் போகிறவர்களும், சாமி கும்பிடுகிறவர்களும் பகுத்தறிவாளர்கள் இல்லை என்றால், தலைவனுக்கு மாலை போட்டு, காணிக்கை கொடுக்கிறவனும் அதே ஜாதியே. இதிலே வித்தியாசம் என்ன? முன்னது "கல்" என்றால் பின்னது "சடலம்". கல் பேசாது என்றால் சடலம் வழித்துணைக்கு வாராது. பகுத்தறிவில் சில ஏற்றத்தாழ்வுகளை வேண்டுமானால் கற்பிக்கலாம். மற்ற மனிதர்களின் பகுத்தறிவை விட விஞ்ஞானிகளின் பகுத்தறிவு ஆழமானது. கண்டுகொண்ட தண்ணீரை வடிகட்டிக்குடிப்பது மனிதனின் பகுத்தறிவு. காணாத தண்ணீரை கண்டுபிடிப்பது விஞ்ஞானியின் பகுத் தறிவு. நம் ஊர் பகுத்தறிவாளர்கள் எதையாவது கண் பிடித்தார்களா? பிரியாணியைக் கண்டு பிடித்தார்கள். அதற்கு வெங்காயம் சுவையானது என்பதைக் கண்டுபிடித்தார்கள்!

உலகத்திற்கு அவர்கள் புதிதாகச் சொன்னது என்ன?

கேட்கின்ற மனிதன் உடனே திருந்தி ஆனந்தமாக வாழ்வதற்கான அற்புதத் திட்டங்கள் எவற்றையாவது அவர்கள் உருவாக்கினார்களா? காலங்காலங்களுக்கு நிலைத்து நிற்கக்கூடிய களஞ்சியங்களையாவது எழுதிக்குவித்தார்களா? எதுவும் இல்லை. கள்ளத்தராசோடு வந்த திருட்டு வியாபாரிகளைப் போல், முதலீடு இல்லாமல் இலாபம் தோடியவர்கள் தங்களுக்குத் தாங்களே சூடிக்கொண்ட பெயரே பகுத்தறிவாளர்கள் என்பதாகும்.

பலாப்பழத்தைப் பகுத்தால் நார் இருக்கிறது. அந்த நாரைப் பகுத்தால் சுளை வருகிறது. சுளையைப் பகுத்தால் கொட்டை தெரிகிறது.

வெங்காயத்தைப் பகுத்துக் கொண்டே போனால் என்ன தெரியும்.? மனிதனின் ஆறாவது அறிவு சாதாரணமாகவே தினசரி இயங்கிக்கொண்டிருக்கிறது. அதன் சராசரி இயக்கத்திலேயே அது கண்டுபிடித்த விடயம் தான் தெய்வம் உண்டு என்பது.

கண்ணெதிரே காணுகின்ற காட்சிகளும், சம்பவங்களும், மனித சக்திக்கு அப்பாற்பட்டவையாகத் தோன்றியதால், இது ஏதோ ஒரு பெரிய சக்தியின் இயக்கம் என்று மனித மனது பேசிற்று. ஆறாவது அறிவு அதை ஒப்புக்கொண்டது.

பகுத்தறிவுக்குத் தெரியாமலா பாண்டிய மன்னர்கள் கோயில் கட்டினார்கள்? கோயில்களில் பூசைகள் நடத்தி நிவந்தங்களை விட்டார்களே மன்னர்கள். அவர்களுக்கு ஆறாவது அறிவே இல்லையா?

ஐக்கிய அமெரிக்காவில் ஹரே கிருஷ்ண இயக்கத்தில் ஈடுபட்டுள்ள பல இலட்சம்

பக்தர்களுமே பகுத்தறிவு இல்லாதவர்களா? கருப்பூரிலும், திருப்பூரிலும் மேடை போட்டு பேசிவிட்டு வயிறுபுடைக்கச் சாப்பிட்டுவிட்டு இனம், குலம் தெரியாமல் நடந்துகொள்வது தான் பகுத்தறிவா? விபூதி பூசாமல் இருப்பதும் குங்கும் வைக்காமல் இருப்பதும், திருமணங்களுக்கு ஐயரை அழைக்காமல் இருப்பதும்தான் பகுத்தறிவில் முளைத்தெழுந்த சுடரொளிகளா? வெறும் பிரமை, மயக்கம்!

இன்றைக்குப் பகுத்தறிவாளன் என்று சொல்லிக்கொள்கிற எவனையும் விட நான் பல விடயங்களைத் தெரிந்துகொண்டிருக்கின்றேன். அவர்கள் படிக்காத புத்தகங்களையெல்லாம் நான் படித்திருக்கிறேன். அவர்கள் எழுதாத விடயங்களை எல்லாம் நான் எழுதியிருக்கின்றேன். எந்த ஆராய்ச்சியில் இறங்கினாலும் என்னுடைய ஆறாவது அறிவு, அதிலே தெய்வத்தைத்தான் கண்டு பிடிக்கின்றது.

அறம், பொருள், இன்பம் என்பது வள்ளுவன் பகுப்பு. அதோடு 'வீடு' என்ற ஒன்றையும் சேர்த்து நான்காக்கிற்று மதம். அந்த 'வீடு' என்பதனை வடமொழியில் மோட்சம் என்பார்கள். இம்மையில் முதல் மூன்றும், மறுமையில் நான்காவதும் மனிதனுக்கு அமைய வேண்டும். ஆனால் அறம், பொருள், இன்பத்தை ஒப்புக்கொள்ளும் சிலரது பகுத்தறிவு நான்காவதான மோட்சத்தை ஒப்புக்கொள்வதில்லை.

'சொர்க்கமாவது, நரகமாவது? மரணத்திற்குப் பிறகு எதுவுமே இல்லை' என்பது அவர்களது வாதம். ஆனால் மத நம்பிக்கையுள்ள சாராசரி மக்கள், மோட்ச நரகத்தை ஒப்புக்கொள்கின்றார்கள்.

அப்படி ஒப்புக்கொண்ட காரணத்தாலேதான், அவர்கள் பாபம் செய்யப் பயப்படுகின்றார்கள். சொர்க்கம், நரகமே இல்லை என்று நம்பும் பகுத்தறிவாளன், எந்தத் தவறுக்கும் துணிந்து விடுகின்றான்.

ஆக ஒன்று புரிகிறது. பகுத்தறிவு இரண்டுவகை. ஒன்று நம்பிக்கையோடு ஆராய்வது. இன்னொன்று அவநம்பிக்கையை வளர்ப்பது. இப்படி அவநம்பிக்கையை வளர்த்துவிட்டால் சராசரி வாழ்க்கையாவது சந்தோசமாக இருக்குமா? இல்லை. நம்பிக்கையுள்ளவனுக்கு எந்தத் துன்பத்திலும் ஒரு நிம்மதி இருக்கும். அதாவது எல்லாம் ஆண்டவனுடைய இயக்கம். நடப்பது நடக்கட்டும் என்று துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளும் சக்தி அவனுக்கு வந்துவிடும்.

பிராமண வீட்டில் ஒருவர் இறந்து விட்டால் உடனே அந்தச் சடலத்தை திண்ணையிலோ அல்லது வெளி வராந்தாவிலே தூக்கிக்கொண்டு வந்து போட்டு விடுகிறார்கள். நான் அறிந்த வரையில் மரணத்திற்காக அவர்கள் அதிகமாக ஓலமிடுவதில்லை. கதறி அழுவதில்லை. காரணம், அவர்களுடைய பகுத்தறிவு தெளிவாகச் சொல்லிவிட்டது 'மரணம் தவிர்க்க முடியாதது' என்று. அந்தச் சமூகத்தில்தான் அறிவாளிகள் அதிகம் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். வைதீக, மத நம்பிக்கையும் அந்தச் சமூகத்திலே தான் அதிகம். அவர்கள் இன்ப துன்பங்களையுச் சமமாகக்கருதுவதைப் பார்க்கும் போது, மதநம்பிக்கையுள்ள பகுத்தறிவு, வாழ்க்கையை எவ்வளவு நிம்மதியாக ஓட்டிச்செல்கிறது என்பது புரிகிறது.

ஆகவே ஒவ்வொரு மனிதனுக்கும் மத நம்பிக்கை வேண்டும். மனிதன் மனிதனாக வாழ மத நம்பிக்கை வேண்டும். மனிதன் மிருகமாக ஆகாமல் இருக்க மத நம்பிக்கை வேண்டும். மனிதனையும் மிருகத்தையும் பற்றி, இதோ காஞ்சிப்பெரியவர் பேசுகிறார்.

**மிருகங்கள் குறுக்குவாட்டில் வளர்கின்றன. இதனாலேயே அவற்றுக்குத 'திர்யக்' என்று பெயர். இதற்கு மாறாக உயர்ந்து மேல்நோக்கி வளருகின்ற மனிதன் மற்ற பிராணிகளைக் காட்டிலும் மேலான நோக்கத்தைப பெறவேண்டும். இப்படிச் செய்தால் இவன்தான் சகல ஜீவ இனங்களையும் விட அதிகமான சுகத்தை அநுபவிக்கலாம். ஆனால் நடைமுறையிலோ அவற்றை விட அதிகமான துக்கத்தைத்தான அநுபவிக்கின்றோம். மிருகங்களுக்கு நம்மைப்போல் இத்தனை காமம், இத்தனை கவலை, இத்தனை துக்கம், இத்தனை அவமானம் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றுக்குப் பாபமே இல்லை. பாவங்களைச் செய்து துக்கங்களை நாம்தான் அநுபவிக்கிறோம். ஒரு வழியில் பார்த்தால் மிருகங்களுக்குக் கொடுத்திருக்கும் செள கரியங்களை ஸ்வாமி நமக்குக் கொடுக்கவில்லை என்று தோன்றும். நம்மை யாராவது அடித்தால் திருப்பி அடிக்க ஓர் ஆயுதமும் நமக்கு இல்லை. மாட்டை**

அடித்தால் அதற்குக் கொம்பு கொடுத்திருக்கிறார். அதனால் திருப்பி முட்ட வருகிறது. புலிக்கு நகம் கொடுத்திருக்கிறார். நமக்குக் கொம்பு இல்லை, நகம் இல்லை. குளிரிலிருந்து காப்பாற்றிக்கொள்ள ஆட்டுக்கு உடம்பில் போர்வை வைத்திருக்கிறார். மனிதன் ஒருவனைத் தான் வழித்து விட்டிருக்கிறார். யாராவது அடிக்க வந்தால் எதிர்க்க முடியாது. குதிரைக்குக் கொம்பு இல்லாவிட்டாலும் ஓடுவதற்கு வேகம் கொடுத்திருக்கிறார். அதுவும் நமக்கில்லை. இருந்தாலும் ஸ்வாமி மனிதனுக்குத்தான் புத்தியை அதிகமாக வைத்திருக்கிறார்.

குளிரிலிருந்து காப்பாற்றிக்கொள்ள வேண்டுமானால் மற்றப் பிராணிகளின் போர்வையை இவன்பறித்து விடுகிறான். கம்பளியாக நெய்து கொள்கிறான். வேகமாகப் போகவேண்டுமா? வண்டியிலே குதிரையைக் கட்டி அதன் வேகத்தை உபயோகப்படுத்திக்கொள்கிற சக்தியை இவனிடத்தில் ஸ்வாமி வைத்திருக்கிறார். தன் சரீரத்திலேயே தற்காப்பு இல்லாவிட்டாலும் வெளியிலிருந்து தினுசு தினுசான ஆயுதங்களைப் படைத்துக் கொள்கிறான். இவ்வாறாக புத்திபலம் ஒன்றைமட்டும் கொண்டு மற்ற ஜீவராசிகள், சடப்பிரபஞ்சம் எல்லாவற்றையும் மனிதனே ஆளுகின்றான். மிருகம் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பிராந்தியத்தில்தான் இருக்கும். குளிர்பிரதேசத்துக் கரடி நம் ஊரில் வாழாது. இங்குள்ள யானை அங்கே வாழாது. ஆனால் மனிதன் உலகம் முழுவதும் வாழ்கிறான். அங்கங்கே அவன் தன் புத்தியை உபயோகப்படுத்தித் தனக்குச் சாதகமாகச் சூழ்நிலையைச் செய்து கொள்வான் என்று இப்படி விட்டிருக்கிறார். இந்த உயர்ந்த புத்தியை வைத்துக்கொண்டு மனிதன் கஷ்டப்படுகிறான். துக்கப்படுகிறான். பிறந்து விட்டதனாலே இவ்வளவு கஷ்டம். இனிப் பிறக்காமலிருக்க வேண்டுமானால் என்ன பண்ணுவது? பிறப்புக்குக் காரணம் என்ன? நாம் ஏதோ தப்புப் பண்ணியிருக்கிறோம். அதற்குத் தண்டனையான இத்தனை கசை அடி வாங்க வேண்டும் என்று விதித்திருப்பதால் இந்த உடம்பை எடுத்து அவற்றை வாங்குகிறோம். பத்து அடி ஆனபிறகு இந்த உடம்பு போய்விட்டால் இன்னோர் உடம்பு வருகிறது. பாக்கி அடியை அந்த உடம்பு வாங்குகிறது. காமத்தினாலே, பாபத்தைச் செய்வதினாலே ஜனனம் வருகிறது. காரியம் எதுவும் பண்ணாமல் இருந்து விட்டால் ஜனனம் இல்லை. கோபத்தினாலே பல பாவங்களைச் செய்கிறோம். கோபத்துக்குக் காரணம் ஆசை, காமம். முதலில் காமத்தை, ஆசையை ஒளிக்க வேண்டும். பற்றை நிறைய வளர்த்துக்கொண்டு காரியம் செய்யாமல் இருப்பது என்றால் முடியாது. பற்றை ஒழித்துவிட்டால் பாவம் செய்யாமல் இருக்கலாம். ஆசைகளுக்கு காரணம் என்ன? நம்மைத்தவிர இன்னொன்று இருப்பதாக எண்ணுவதால் அதனிடம் ஆசை வருகிறது. உண்மையில், சாந்தமாகிய ஒரே சிவமே எல்லாமாக இருக்கிறது. ஒரு மாடு கண்ணாடியில் தன்னைப் பார்த்து விட்டு இன்னொரு மாடு இருப்பதாக நினைத்து அதை முட்டப்போகிறது. ஒரு மனிதன் தன் பிரதிபிம்பத்தைப் பார்க்கிறான். இன்னொரு மனிதன் இருக்கிறான் என்று அவன் நினைக்கிறானா? இரண்டும் ஒரே பொருள் என்பது அவனுக்குத் தெரிந்து சாந்தமாக இருக்கிறான். இப்படியாக நாம் பார்க்கின்ற அனைத்துமே ஒன்று தான். இரண்டாவது என்று எண்ணினால் ஆசை வரும். ஆசை வருவதனால் பாவங்களைச் செய்கிறோம். அதனால் ஜனனம் உண்டாகிறது. எல்லாம் ஒன்று என்ற ஞானம் நமக்கு வந்துவிட்டால் வேறு பொருள் இல்லாததனாலே ஆசை இல்லை; கோபம் இல்லை; பாபம் இல்லை; காரியம் இல்லை; ஜனனம் இல்லை; துன்பம் இல்லை. இந்த ஞானத்தை எப்படிப் பெறுவது? நம்மைப் பெற்ற அம்மா உடம்புக்குப் பால் கொடுப்பாள். அறிவுக்கு ஞானப்பால் கொடுப்பவள் அம்பாள்தான். ஞான ஸ்வரூபமே அவள் தான். அவளுடைய சரணாரவிந்தத்தைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு அவளுடைய ஸ்வரூபத்தோடு நம்மை நாம் கரைத்தாலே ஞானம் வரும்; மனிதன் அப்போது தெய்வமாவான்

முதலில் மனிதனை மிருகமாக இல்லாமல் மனிதனாக ஆக்கவேண்டும். அப்புறம் அவனைத் தெய்வமாகவே உயர்த்திவிட வேண்டும். இந்தக் குறிக்கோளுடன் தான் சகல மதங்களும் உண்டாகி இருக்கின்றன. சித்தாந்தம், தத்துவங்களில் அவற்றுக்குள் எத்தனை பேதமிருந்தாலும், இப்போதிருக்கிற மாதிரி மனுஷ்யனை ஒரே காமக் குரோதாதிகளுடன் இருக்க விடக்கூடாது; இவனை நல்லவனாக ஆக்கி அன்பு, அடக்கம், சாந்தம், தியாகம் முதலிய குணங்கள் உள்ளவனாகப் பண்ணவேண்டும் என்பதில் எல்லா மதங்களும் ஒரே குரலில்தான் பேசுகின்றன.

******

# What are Vishnu's Dasavatharams?

(Contd from last issue..)

## 10.Kalki

Kalki is the final incarnation of Vishnu who will appear at the end of the eon( A vast age – Yuga), when corruption is beyond every measure of control, necessitating the end of the world. According to mythology, he will rise from the sea on a great white horse with a sword in hand. He will destroy the impure world, killing everyone except those who seek refuge in him. Having thus dismantled the world, Vishnu will reassemble a new and pure world that will be inhabited by the believers and the faithful. Vishnu uses both force and guile to ensure the stability of the universe. His consort Laxmi, goddess of wealth and power, offers him the wherewithal to maintain the integrity of the world.

# MYTHS & PURANAS of Various GODS

[No Hindu believes ultimately that there are several Gods. They believe there is only one power controlling the universe. In order for the human mind to focus and understand the nature of this power, Hinduism allows us to worship that power through different forms or images. Once the devotion gets stronger, the mind sees beyond that image and idol to realise that supreme power]

## What is Brahma's Story?

Brahma is responsible for creation. But he is not worshipped because he is responsible for distracting the mind away from the soul and towards the cravings of the flesh.
Before the cosmos existed, Brahma was all alone, self-contained and self-content. Wounded by the love-god Kaman's darts, however, he felt inadequate and longed for company. He split himself and created Shatarupa, the goddess of Samsara. She was ephemeral yet enchanting. Her many forms captivated Brahma.
Like all material things, Shatarupa would turn into something else every time Brahma got to her. Thus all creatures of the cosmos, from the smallest insect to the largest mammal, came into being. Brahma became Prajapati, lord of progeny.
Brahma, in his obsession, sprouted five heads, so that he could look upon Shatarupa at all times. To restrain his desires, Shiva as the ferocious Bhairava wrenched off one of his heads.
Sobered by the experience, Brahma took Saraswati, the goddess of knowledge, as his consort. With her help, he regained control of his mind, drawing it away from the senses towards the bliss of the soul.

## Who is Aiyappa?

The eternal boy-god sits atop the hill of Sabarimalai, Kerala, protecting the forests from demons and wild malevolent spirits. He was born when Vishnu, in the form of the enchantress Mohini, united with Shiva.
A childless king raised this divine child. Soon after his arrival into the royal household, the queen gave birth to a son. As the years passed, the queen feared that the foundling - who had grown up to be a wise, strong and handsome youth - would usurp her own son's claim to the throne. Feigning illness, she claimed that only the milk of a tigress fetched by a virgin warrior would cure her.
Ayyappa immediately set out for the forest. The queen's plot to kill Ayyappa backfired. In the forest, he fulfilled his destiny and returned a god. After he had milked the leopards, a ferocious demoness called Mahishi attacked him. Ayyappa killed Mahishi and rode into his father's kingdom on a tiger covered with the battle scars. The people cheered his return and begged him to be King. But Ayyappa renounced his claim to the throne and retired to the peak of Sabarimalai.
Every year, thousands of devotees make a perilous journey across forests and over hills to take refuge in the grace of this brave and magnanimous vira.

## What is Parvati Purana?

Hindu goddesses personify Nature – its bounty, beauty, wisdom and mystery. In benevolent forms, they nurture life. But in malevolent forms, they destroy everything. They are therefore adored and appeased with offerings of flowers and bridal finery.
Siva agreed to participate in worldly affairs and so married Dhakshayini, daughter of the primal priest-king Dakṣha. Siva's unworldly ways annoyed Daksha who refused to invite Siva to a Ygna he has been performing. Dhakshayini sought permission from Siva to see her father and explain. Siva refused and Dhakshayini left without permission, rushed into her father's sacrificial hall, demanded for Siva to be invited. Dhaksha insulted her and Siva, and asked her to leave. Shakti returned to Siva who refused to accept her. Shiva killed Daksha and performed 'Rudra Dhandava' dance.
Siva turned into a recluse and retired into a mountain-cave, where he meditated, bridling his mind, restraining his senses, until the restrained energy transformed him into a pillar of fire.
In fear, the gods approached the mother-goddess Shakti. "Let his energy be released. Let it be transformed into a warrior who will command the celestial armies," they begged. In response, the goddess took the form of Parvati, princess of the mountains, and sought to win Siva's heart with the help of Kama, god of love. But when Kama shot his love-dart at Shiva, Shiva opened his third eye, let loose

a fiery missile and reduced him to ashes.
Parvati then became a hermitress and mortified her body through austerities that won Shiva's admiration. He accepted her as his consort. He then took the form of Artha Nareeswarar – half Siva and half Parvati. Parvati also cajoled Shiva to reveal the secrets of the cosmos locked in his mind. Many seers were enlightened when they overheard their conversation.

## What is Laxmi Purana?

Lakshmi is the goddess of wealth, fortune, beauty, bounty, prosperity, pleasure, affluence and abundance – all the goods things in life. Hence, gods, demons and humans adore her.
She sits on a lotus, draped in red sari, bedecked in jewels and holds the pot of bounty, overflowing with grain and gold. White elephants, symbol of rain clouds consecrate her with water that brings life to parched land.
As Shreedevi, the goddess makes kings out of men, bestowing them with sovereignty, splendour and royal authority. In this form, she is Vishnu's Shakti, the source of his divine power, providing him with the wherewithal to protect the universe.
As Bhudevi, the earth-goddess, she gives all creatures food, clothing and shelter. In this form, she is Vishnu's responsibility. She is earth-cow, Go-maata, whose milk nourishes the cosmos. Vishnu is her cowherd, punishing those who dare harm her.
The goddess was churned out of the ocean of milk. She went to the demons, the asuras but turned away on discovering that power corrupted them. She then went to the devas, but found them too obsessed with pleasure. As she moved from place to place, looking for one worthy of her affection, she acquired the reputation of being Chanchala, the fickle-one. The gods said she was too demanding while the demons accused her of being capricious. Finally, she chose Vishnu as her eternal consort because he selflessly carried out his duties as upholder of cosmic laws.
Lakshmi, mistress of material abundance (artha) goes wherever there is Vishnu, guardian of righteous conduct (dharma) bringing with them their son, Kama, lord of worldly pleasure.

## What is Saraswathi Story?

Saraswati is the consort of Brahma and the goddess of knowledge and of the arts. Worldly possessions do not interest her; she rules the intellectual and creative realm. Libraries and schools are her temples. She does not adorn herself with gems and jewels. Draped in a white sari, she rides a swan holding a book in one hand and a flute in another.
At the dawn of Life, Brahma was so struck by the beauty of his first creation – Shatarupa, goddess of material existence – that he sprouted five heads to look upon her at all times. He chased her wherever she went. but no matter how hard he tried, he could not possess this mercurial being. To restrain Brahma's desires, Shiva, the supreme ascetic, wrenched off one of Brahma's heads.
Sobered by the experience, Brahma turned to Saraswati and learnt to rein in his bewitched mind. Saraswati's children, the Vedas, showed Brahma the way out of the labyrinth of sensuality. From that day, the four heads of Brahma began chanting the four Vedas.

## Who is Kaahli?

The gods could not kill the demon Raktabija. Every drop of his blood that touched the ground transformed itself into another Raktabija. Within a few minutes of striking this asura with their weapons, the gods would find the entire battlefield covered with millions of Raktabija clones. In despair, the gods turned to Shiva. As Shiva was lost in meditation, they turned to his consort Parvati.
The goddess immediately set out to do battle with this dreaded demon in the form of Kaahli. Her eyes were red; her complexion was dark, her features gaunt, her hair unbound, and her teeth sharp like fangs. As she rode into the battleground on her lion, Raktabija experienced fear for the first time in his demonic heart. Kaahli ordered the gods to attack Raktabija. She then spread her tongue to cover the battlefield preventing even a single drop of Raktabija's blood from falling on the group. Thus, she prevented Raktabija from reproducing himself.
Drunk on Raktabija's blood, Kali ran across the cosmos killing anyone who dared cross her path. She adorned herself with the heads, limbs and entrails of her victim. To pacify her, Shiva threw himself under her feet. This stopped the goddess. She calmed down, embraced her husband, shed her ferocious form to become Gauri, radiant mother.

## Who is Durga?

The gods could not defeat the buffalo-demon Mahisha. So they turned to Shiva who advised all devas to release their shaktis (spiritual prowess) locked within their bodies. The shaktis of the gods emerged in female form – Shivani from Shiva, Vaishnavi from Vishnu, Brahmani from Brahma, Aindri from Indra, Kaumari from Kumara. These goddesses fused together in blinding light from which arose a magnificent goddess with many arms.
The gods called this goddess Durga, the invincible one. They armed her with their weapons. Varuna, the sea-god, gave her a rope; Indra, the god-king, gave her a thunderbolt; Vishnu gave her a discus; Kumara gave her a lance; Surya, the sun-god, gave her a bow and arrow; Chandra, the moon-god, gave her an axe; Yama, the god of death, gave her a mace; Brahma gave her a shield; Agni, the fire-god, gave her an axe; Vayu, the wind-god, gave her a conch; Shiva gave her a trident. Thus armed, Durga rode to the top of a mountain on a lion.
Attracted by her beauty, Mahisha came to the mountain and proposed marriage. "I will marry only he who defeats me in battle," said Durga. Mahisha immediately attacked the goddess. She hurled many weapons at the buffalo-demon but each time he rose unscathed. Finally she kicked him. Mahisha, immune to the weapons of the gods, succumbed to the touch of her feet. Durga immediately impaled him with her trident and blew her conch in victory. All the gods saluted this warrior-goddess and celebrated her triumph.

******



# திருக்குறள்

## இல்வாழ்க்கை 5ம் அதிகாரம்

## (Chapter 5) Life of the householder

## Let us learn Thirukkural

1 இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை

1. The true householder is one who provides support for all who follow other paths of life.------------------------------------------------

2 துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை

2. The householder is the friend of those who have renounced the world, the destitutes and unclaimed dead.

----------------------------------------------------

3 தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு ஐம்புலத்தாறு ஓம்பல் தலை

. Five are the duties of the householder, namely, the performing their obligations to the ancestors, to the God, to the guests, to the relatives and the looking after of one's own self.

----------------------------------------------------

4 பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்

4Behold the man who fears the reproof of the wise and does charity before eating his meal; his seed never decays.

----------------------------------------------------

5 அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது

5.. If love is abound in the home and righteousness does prevail, the home is perfect and its end is all fulfilled.

----------------------------------------------------

6 அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற் போஒய்ப் பெறுவது எவன்

6.If a man fulfills the duties of the householder, where is the need for him to take up other duties?------------------------------------------

7 இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான் முயல்வாருள் எல்லாம் தலை

7.Among those that seek after salvation, the greatest are they who lead a virtuous family life, performing correctly all the duties that belong to it.------------------------------------

8ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து

8.Behold the householder who helps others in the observance of their vows and who leads a virtuous life himself; he is a greater saint than those who take themselves to a life of fasting and prayer.

----------------------------------------------------

9 அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும் பிறன்பழிப்பது இல்லாயின் நன்று

9.Righteousness belongs especially to the married life; and good name is its ornament.--

----------------------------------------------------

10 வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

10.The householder who lives as he ought to live will be as looked upon as a god among men.

----------------------------------------------------

**Competition questions for this issue: (Closing Date 20 September 2007)**
**(Suggested age 9+)**

## 10 Questions:

1. **Name the 10 Avatars of Vishnu.**
2. **What form Lord Shiva took to restrain Brahma and to wench off one of his 5 heads?**
3. **Name the consorts of Brahma, Vishnu and Shiva.**
4. **What is the meaning of Artha Naariswarar?** (அர்த்தநாரீஸ்வரர்)
5. **Why did Lakshmi choose Vishnu as her consort?**
6. **What are the duties of a householder?**
7. **Write the meaning of the Kural:**

   "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
   வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்"
8. **Write in Tamil, the last Kural of those given in the lesson.**
9. **Why does Hinduism have many forms of God?**
10. **Why do we have to respect the elders?**

---

**Questions may be asked from issue 56onwards. Back issues are available on request. Please keep them safe.**

***All students who participate in this competition from Issue 46 are awarded 10 points each (per issue).***

***Your Name in English, Age, School and Tel. must be stated with the answers, please.***


**"Those students who achieve 100 points (including answers to this issue) will be given a special prize and recognition on stage at the 30th anniversary celebrations of Saiva Munnetra Sangam.**

**You may submit answers to all previous competitions by the end of September 2007**

**A new series of competitions will start from next issue."**

# பிதுர்களை வழிபடுவோம்!

தொகுப்பு: ச.ஆ



## பிதுர்கள் என்பவர் யார்?

நமது குடும்பத்தில் மறைந்த மூதாதையர்களில் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள் பிதுர்களாவர். அவர்கள் ஒளி பொருந்திய சூட்சும தேகமுடையவர்கள். புல், பூண்டு, முதலான அனைத்து ஜீவராசிகளுக்குமே பிதுர்கள் உண்டு. மனிதன் இறந்ததும் அவனது நல்வினை தீவினைக்கேற்ப சுவர்க்கத்துக்கும் (ஒளிமயமானபகுதி) நரகத்திற்கும்(இருண்டபகுதி) செல்கின்றான். ஒளிமயமான பகுதியில் பிதுர்லோகம் அமைந்துள்ளது. இப்பகுதி முழுவதும் மிகவும் ரம்மியமான சோலைகளும், நீரூற்றுக்களும் நிரம்பியிருக்கும். அங்குள்ள சோலைகளில் நிறைய குளிர்ச்சி தரும் அட்சயவடம்(ஆலமரங்கள்) ஏராளமாக உள்ளன. இந்த மரங்களின் அடியில் தான் பிதுர்கள் அமர்ந்து ஒருவரோடொருவர் கூடிப்பேசி மகிழ்கின்றனர்.

குடும்பத்தில் ஆண்வாரிசு தோன்றியவுடனேயே இறந்த நம் முன்னோர்கள் (பித்ருக்கள்) ஆனந்தப்படுகின்றார்கள். காரணம் ஆண் வாரிசு வந்து தன்னுடைய பிதுர் கடமைகளைச் செய்து தங்களைக் கரையேற்றும் என்று எதிர்பார்த்து ஏங்கிக் காத்திருக்கின்றனர். அதனால்தான் வம்சவிருத்திக்கு ஆண் குழந்தை பிறந்துவிட்டது என்று மகிழ்ச்சி அடைகின்றோம்.

நமது வாழ்வில் தினமும் ஏதாவதொரு பாவத்தைச் செய்யும் சூழ்நிலை இயல்பாகவே அமைந்து விடுகின்றது. தெரிந்து செய்யும் பாவங்கள், தெரியாமல் செய்யும் பாவங்கள் என்று அவை நீண்டுகொண்டே போகின்றனவே தவிரக் குறைவதில்லை. மனிதப்பிறவி அரியது. நம்மை அன்புடன் பேணி, அருமையாக வளர்த்து ஆளாக்குகின்றனர் பெற்றோர். எவ்வித சுயநலமுமின்றி பாசத்தைக் கொண்ட்டிப் பராமரிக்கும் தாய்தந்தையரைச் சரிவரப் புரிந்துகொண்டு தங்கள் கடமைகளைச் செய்பவர்கள் வெகுசிலரே! பொருளாதாரச் சிக்கலினாலும், மனைவியிடம் மறுத்துப்பேச இயலாமலும் தங்களை வளர்த்து ஆளாக்கியவர்களை உதாசீனப்படுத்தி முதியோர் இல்லத்திலும், உறவினர் வீடுகளிலும், தனியே கிராமப்புறவீடுகளிலும் தவிக்க விடுகிறோமே. இப்படித் தெரிந்தும் தெரியாமலும் நாம் செய்யும் பாவங்களால் குடும்பத்தில் எவ்வளவு துன்பங்கள் எவ்வளவு சோதனைகள் பொற்றோரை இறுதிக் காலத்தில் கவனிக்காமல்விட்டதன் விளைவு-பலகுடும்பங்களில் தீராத நோயினால் அவதிப்படுதல், கரு உருவாகிக் கலைவது, திருமணம் சரிவரக் கூடிவராமல் தள்ளிப்போவது, எதிர்பாராதவிதத்தில் தொழிலில் சரிவு, மனநிலை குன்றிய குழந்தைகளை வைத்து துன்பப்படுவது, புத்திரபாக்கியம் இல்லாமை, வீடுவாசலை இழந்து தவித்தல், நல்ல மனைவி-நன்மக்களைப் பெறாமல் அவதிப்படுவது, வியாபாரத்திலும் நட்டம் ஏற்பட்டுக் கடன் தொல்லை, விபத்து நேர்வது, கோமாவில் கிடத்தல், ஊனமுற்ற குழந்தைகள் என்று இப்படிப் பலவிதங்களிலும் அன்றாடம் பல குடும்பத்தினர் கஷ்டப்படுகின்றார்களே. இவையெல்லாம் ஏன்? இதற்கெல்லாம் மூலகாரணம் மூதாதையரைப் பூசிக்காமல் விட்டதுதான்.

நமக்கு நல்வாழ்வளித்துச் சென்ற பிதுர்களுக்கு

பிதுர் தர்ப்பண பூசையைச் செய்யாமல் தவற விடுகிறார்கள் சிலர். ஒரு சிலருக்கு ஏதாவது நடந்தால் உடனே பூர்வஜென்ம புண்ணியம் முன்னோர்கள் ஆசி என்கிறோம். அந்த முன்னோர்களின் ஆசியைப் பரிபூரணமாகப் பெற வேண்டும். அப்போதுதான் குடும்பம் மங்களகரமாக விளங்கும்.

பிதுர்களைத் திருப்தி செய்வதற்குத்தான் தர்பண பூசை! தேவலோக மூலிகையான தர்ப்பையால் எள் வைத்து சாதி, மத பேதமின்றி அனைவரும் தர்ப்பணம் செய்து மூதாதையரை மகிழ்விப்பது கடமை.

## பித்ருக்கள் எவ்விதம் வருகிறார்கள்?

மஹாளயபட்சம் ஆரம்ப தினத்தன்று பித்ரு தேவதைகள், சூரியபகவான், தர்மராஜன் ஆகியோரின் அனுமதி பெற்று பிதுர்கள், சூரிய ஒளிக் கதிர்களாக நம்மிடம் வருகிறார்கள். இந்த விமானங்கள் சூரியனின் ஒளிக்கற்றைகள் மூலம் பறந்து வருகின்றன. இவ்விதம் பிதுர்கள் பூமியில் இறங்கும் போது அவர்களை தேவர்களின் உலகிலுள்ள மகரிஷிகள் ஆசீர்வதிக்கின்றாகள்.தேவர்கள் வணங்குகின்றார்கள். பிதுர்கள் பரம பவித்திரமானவர்கள். தங்களது ஜீவித காலத்தில் செய்துள்ள புண்ணிய செயல்களால் புடமிடப்பட்ட தங்கம் போல் ஒளி பொருந்தியவர்களாகப் பிதுர்கள் பிரகாசிக் கின்றார்கள் எனப் புராதான நூல்கள் கூறுகின்றன.



மீண்டும் தங்கள் குழந்தைகளைப் பார்க்கும் வாய்ப்புக் கிட்டியதால் அவர்கள் பேருவகை அடைவதாக 'கருடபுராணம்' கூறுகின்றது. அவர்கள் நம்மிடையே வந்து நம்முடன் தங்கும் இந்தப் பதினைந்து நாட்களும் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எப்படிப் பேச வேண்டும், வீட்டை எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை வைத்யநாததீட்சிதம் என்ற வடமொழி நூல் அதி அற்புதமாக நமது நன்மைக்கா விளக்கியுள்ளது.

இந்த பதினைந்து நாட்களிலும், ஒவ்வொருவரும் வீட்டை மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்வது அவசியம். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் சண்டைபோடுவது தகாத சொற்களைப் பேசுவது, நன்மைதராத கரியங்களில் ஈடுவடுவது புலால் உண்ணுதல், கள், மது, குடித்தல் ஆகியவற்றைக் கண்டிப்பாகத் தவிர்க்கவேண்டும்.

நாம் எந்த அளவிற்குத் தூய்மையாக இருக்கிறோமோ-எந்த அளவிற்குச் சுத்தமாக இருக்கின்றோமோ-எந்தஅளவிற்கு ஒற்றுமையாக இருக்கின்றோமோ-எந்த அளவிற்குப் பிதுர்களைச் சிரத்தையுடன் பூசிக்கின்றோமோ அந்த அளவிற்கு இந்தப் பதினைந்து நாட்களும் நம்முடன் தங்கியிருக்கும் பிதுர்கள், மன மகிழ்ச்சியையும், மன நிறைவையும் அடைகி-றார்கள் எனப் பழைமையான தர்மநெறி நூல்கள் குறிப்பிடுகின்றன.

பிதுர்கள் இவ்விதம் இந்தப் பதினைந்து நாட்களும் நாம் குடும்பம் நடாத்தும் நேர்மையைக் கண்டு மனத்திருப்தி அடைவதன் பலனைப் பெற்று நம்மிடம் சேர்கிறார்கள்.

## உடனுக்குடன் நன்மை!

நாம் செய்யும் அனைத்துப் புண்ணிய காரியங்களுக்கும் நல்ல பிரதி-பலன் உண்டு. நமது நற்செயல்களுக்கான புண்ணிய பலனை எட்டு தேவர்கள் அவ்வப்போது சேர்த்து வைத்துக் கொண்டே வருகிறார்கள். எதிர்காலத்தில் நமக்குத் துன்பங்கள் ஏற்படும் போது இவ்விதம் சேர்த்து வைத்த புண்ணிய பலன்களை நமது தேவைகளுக்கு ஏற்றவாறு நமக:கு அளிக்கின்றனா். ஆனால் மஹாயள பட்சத்தின் போது நாம் பிதுர்களை அந்தப் பதினைந்து தினங்களிலும் பூசித்து அவர்களுக்கு திருப்தியை அளிக்கும் நற்செயலின் பலன் மட்டும் நமக்கும், நம் குடும்பத்தினருக்கும் முக்கியமாக நமது குழந்தைகளுக்கும் உடனுக்குடன் அளிக்கப்படுகின்றது. அதனால் குடும்பத்தில் ஏற்படும் சிரமங்களனைத்தும் உடனுக்குடன் தீர்க்கப்பட்டுவிடுகின்றன. மஹாளய பட்சத்தின் தனிச்சிறப்பு இதுதான்.

## நமக்கு உதவியவர்களுக்கு திதி செய்தல்!

நமது பாரத தர்மம் உலகமனைத்தையுமே பாசத்துடன் அணைத்துக்கொண்ட தர்மமாகும். நமக்குப் பல தருணங்களில் அன்பும், இரக்கமும்

காட்டி உதவிய பிதுர்களுக்கும், இந்த மஹாளய பட்சத்தில் திதி செய்கின்றோம். இவர்களுக்கு 'காருண்ய பிதுர்கள்' என்று பெயர். அதாவது நாம் துன்பப்படும் போது நம்மீது கருணைகாட்டி உதவிய பிதுர்கள் என்று பொருள். 'உலகமக்களனைவரும் நலமுடன் இருக்கட்டும் (சர்வே ஜன: சுகினோ பவந்து) என்று கூறுகிறது வேதம். இந்த அடிப்படையில்தான் நம்மிடம் எவ்வித பிரதிபலனையும் எதிர்பார்க்கமால், நம்மீது கருணை காட்டி, நமக்கு உதவிசெய்தவர்கள்-அவர்கள் யாராக இருந்தாலும் - அவர்களுக்கும், இந்த மஹாயள பட்ச காலத்தில் பூசை செய்கின்றோம்.

## பிதுர்கள் ஐந்துவகை

**1 ஒரு பிறவி முடிந்த பின்பு மீண்டும் மானிடர்களாகப் பிறவி எடுத்துள்ள ஜீவன்கள்**

**2 தாங்கள் செய்துள்ள நற்செயல்களின் பலனாக இறைவனுடன் ஐக்கியமாகிவிட்ட ஜீவன் முக்தர்கள்.**

**3 தாங்கள் செய்துள்ள அளவற்ற புண்ணியங்களின் பலனாக புண்ணிய உலகில் வசிக்கும் ஜீவன் முக்தர்கள்.**

**4 ஒரு பிறவி முடிந்து மறுபிறவி கிடைப்பதற்கு முன்பு பிதுர்களின் உலகில் தங்கும் ஜீவன்கள்.**

**5 இப் பிறவியில் பல தவறுகள் செய்து அதனால் மானிடப்பிறவியை இழந்து, செடிகள், கொடிகள், மிருகங்கள், பறவைகள், புழுக்கள் போன்றவையாகப் பிறவி எடுக்கும் ஜீவன்கள்.**

இவ்விதம் வகுக்கப்பட்டுள்ள பிதுர்கள் அனைவருக்குமே அவர்களது சந்ததிகள் தர்ப்பணம், ஆண்டுத்திதி போன்றவற்றைச் செய்துவர வேண்டியது மிகவும் அவசியம். நாம் அளிக்கும் சிராத்தம், தர்ப்பணம், திதி பூசைகள் ஆகியவை இந்தப் பிதுர்களுக்கு எவ்விதம் போய்ச்சேருகின்றன என்பதைப் புராதனநூல்கள் விளக்கியுள்ளன. இவற்றை நாம் அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

### 1மீண்டும் மானிடர்களாகப் பிறக்கும் ஜீவன்கள்

நாம் அளிக்கும் பிதுர் பூசைகள் அனைத்தையும் பிதுர் தேவதைகள் நம்மிடமிருந்து பெற்று நம் பிதுர்களிடம் சேர்ப்பிக்கின்றனர். இந்தப் பிதுர் தேவதைகள் "வசுக்கள்" எனவும் "ருத்திரர்கள்" எனவும் "ஆதித்யர்கள்" எனவும் அழைக்கப்படுகின்றார்கள். சூரியபகவானுக்குச் சமமான வீரியத்தையும், சக்தியையும், பெற்றவர்கள் இவர்கள். இவ்விதம் நாம் அளிக்கும் திதி பூசைகள் மற்றும் அமாவாசை, கிரகண புண்ணியகாலங்கள் ஆகிய காலங்களில் அளிக்கும் தர்ப்பணம் ஆகியவற்றின் பலன்கள் மறுபிறவி எடுத்துள்ள நம் முன்னோர்களைத் தவறாமல் சென்றடைகின்றன. முற்பிறவிகளில் இந்தப் பிதுர்கள் செய்திருக்கக்கூடிய சில தவறுகளினால், மறுபிறவியில் அவர்கள் சிரமப்படும்போது நாம் தரும் திதி பூசைகளின் பலனாக அவர்களது சிரமங்கள் பெருமளவில் குறைகின்றன. அப்போது அவர்கள் மனத்தில் ஏற்படும் மகிழ்ச்சி, நிம்மதி ஆகியவை நல்லாசிகளாக மாறி பிதுர் தேவதைகளின் மூலம் மீண்டும் நம்மை வந்தடைகின்றன. அதனால் நமது கஷ்டங்களும் தீருகின்றன. சில தருணங்களில் நமது வாழ்க்கையில் நமக்கு கஷ்டங்கள் ஏற்படும் போது எதிர்பாராத இடங்களிலிருந்து உதவிகள் கிடைப்பதற்கும், அதனால் ஏற்படும் சிரமங்கள் நீங்குவதற்கும் இதுவே காரணமாகும்.

### 2 இறைவனடியில் ஐக்கியமாகி ஜீவன் முக்தர்களாகி விட்ட பிதுர்கள்

இவர்களுக்காக இவர்களது பிள்ளைகள் அல்லது பேரன்கள் செய்யும் திதி மற்ற பிதுர் பூசைகள் ஆகியவற்றை இறைவனே ஏற்றுக்கொள்கின்றான். இதனையும் பிதுர் தேவதைகள்தான் இறைவனிடம் சேர்ப்பிக்கின்றன. இதனால் திருவுள்ளம் மகிழ்ந்த இறைவனின் திருவருளைப் பிதுர்களின் ஆசியாக நம்மிடம் சேர்த்துவிடுகின்றனர் பிதுர்தேவதைகள்.

### 3 தாங்கள் செய்துள்ள அளவற்ற புண்ணியங்களின் பலனால் புண்ணிய உலகங்களில் வசிக்கும் பிதுர்கள்

நாம் செய்யும் திதி மற்றும் இதர பிதுர் பூசைகளைப் பிதுர் தேவதைகள் இவர்களுக்கும் சிறிதளவும் தவறாது சேர்த்து விடுகின்றனர். அதனால் அவர்கள் மகிழ்ந்து நம்மை ஆசீர்வதிக்கின்றனர். இவர்களது ஆசியும் நம்மை வந்தடைகின்றன.

### 4பிதுர் உலகில் தங்கும ஜீவன்கள்.

இவ்வுலக வாழ்வை நீத்தபின்பு, ஆறாவது மாதத்தில் பிதுர்களின் உலகினை நமது

முன்னோர்கள் அடைவதாக மிகப் பழைமையான நூல்கள் கூறுகின்றன. பிதுர் உலகின் இயற்கை வனப்பு, சூழ்நிலை ஆகியவற்றையும் இந்நூல்கள் வர்ணித்துள்ளன. ஏராளமான தடாகங்கள், நீரூற்றுக்கள், அட்சயவடம் என்ற புண்ணிய மரங்கள் ஆகியவை நிறைந்துள்ள மிகவும் ரமணீயமான இவ்வுலகில் பிதுர்கள் ஆனந்தமாகச் சிலகாலம் வசிப்பதாகவும், நாம் பக்தியுடன் செய்யும் திதி பூசை மற்றும் அமாவாசை, தமிழ்மாதப்பிறப்பு, சூரிய, சந்திர கிரகண காலங்கள் ஆகியவற்றின்போது செய்யும் பூசைகள் ஆகியவை பிதுர் உலகில் தங்கியுள்ள பிதுர்களுக்கு அன்னமாகவும்(உணவு) அமுதமாகவும், தாகத்திற்குத் தீர்த்தமாகவும், அந்தத் தீர்த்தத்தை அவர்கள் அருந்துவதற்கு ஏற்ற ஸ்வர்ணம்(தங்கம்)பாத்திரமாகவும், வஸ்திரமாகவும் அவர்களுக்குப் பிதுர் தேவதைகள் மூலம் போய்ச் சேருகின்றன.

அங்கு சென்ற பின்பு நமது முன்னோர்களுக்கு நம்மைப் பற்றிய நினைவும் கவலையும் நீடிக்கின்றன. நமது திதி பூசையினால் அவர்கள் அளவற்ற மகிழ்ச்சி அடைகின்றனர். பிரிந்து வந்துவிட்டாலும் நம்மை நம் குழந்தைகள் மறக்கவில்லை என்பதை உணர்ந்த அவர்கள் பெருமையுடன் நம்மை ஆசீர்வதிக்கின்றனர். அந்த ஆசி சூரியன், பிதுர்தேவதைகள் ஆகியோர் மூலம் நம்மைச் சேருகின்றது. இவ்விதம் நாம் பெறும் பிதிர்களின் ஆசி கற்பனைக்கும் எட்டாத அளவிற்கு நமக்கும், நம்மைவிட முக்கியமாக நமது குழந்தைகளுக்கும் நன்மைகளை உடனுக்குடன் செய்கிறது. நமது முன்னோர்கள் காலமான ஒரு வருடகாலம் பூர்த்தியாகும் வரை நமக்கும் அவர்களுக்கும் உள்ள நேரிடைத்தொடர்பு நீடிக்கிறது. இதுவே பிதுர் பூசையின் இரகசியமும், சக்தியுமாகும்.

**5 மிருகங்கள் அல்லது பறவைகள் அல்லது பிராணி அல்லது செடி, கொடிகளாகப் பிறவி எடுத்துள்ள பிதுர்கள்!**

இவர்களுக்கு நாம் அளிக்கும் பிதுர்பூசைகள் பிதுர் தேவதைகள் மூலம் சென்றடைகின்றன. அதனால் பசி, தாகம் தீர்ந்து இந்த ஜீவராசிகள் முக்தி அடையும் பலன் மீண்டும் நம்மை வந்தடைகின்றன. மரம், செடிகொடிகளுக்குக் கூட பசி உண்டு. அவற்றிற்கு நாம் செய்யும் திதி பூசை நீராகச் சென்று சேர்கிறது. அதனால் அவை செழித்து உயிர் வாழுகின்றன. இந்தப் புண்ணியமும் நம்மை வந்தடைகின்றது.

மஹாளயபட்டச்திலும், கயை(காயா) மானஸசரோவர், புஷ்கரம், பிரம்மகபாலம் (பத்ரிநாத்), குருஷேத்திரம், கோமுக் ஆகிய மகத்தான திவ்விய தலங்ளில் மட்டும் பிதுர்கள் அவர்கள் எத்தகைய பிறவி எடுத்திருந்தாலும் சூரியன், பிதுர் தேவதைகள் ஆகியோர் மூலம் இல்லாமல் சூட்சும சக்தியினால் தாங்களே நேரில் வந்து நாம் அளிக்கும் பூசையைப் பெற்று நம்மை ஆசீர்வதிக்கின்றார்கள்.

## பிதுர்களை வழியனுப்பி வைத்தல்


இவ்விதம் மஹாளய பட்சம் பதினைந்து நாட்களும் பூஜித்த பின்பு மஹாளய அமாவாசை அன்று விசேட பூசை செய்து நம்மை ஒரு பொருட்டாகக் கருதி இப்பூவுலகிற்கு எழுந்தருளி நம்முடன் இந்தப் பதினைந்து நாட்களும் தங்கி, நமக்கு அருள் புரிந்ததற்காக அவர்களுக்கு நன்றி கூறி அவர்களுக்குப் பாதபூசை செய்து (பெரியவர் ஒருவர்மூலம்) நன்றி கூறி அம்மகாபுருஷர்களையும், அவர்களது தேவியரையும்(மனைவியர்) வழியனுப்பி வைக்கின்றோம். அவர்களும் தாங்கள் வந்த தங்கமயமான விமானத்திலேயே சூரியனின் கிரணங்கள் வழியாக தங்கள் நல்லுலகிற்குச் செல்கின்றார்கள். ஆதலால் மஹாளய பட்சம் என்ற மகத்தான புண்ணிய காலம் நமக்கு அளவற்ற நற்பலன்களைத் தேடித்தருகின்றது.

சிரத்தையுடன் மஹாளய பட்சத்தை அனுட்டிப்பவர்கள் குடும்பங்களில் எத்தகைய துன்பமானாலும் நொடியில் தீர்ந்து அந்தக்குடும்பம் செழிப்பதை அனுபவத்தில் காணலாம். மஹாளய பட்சத்தில் செய்யும் பிதுர்பூசை இறைவனின் திருவுள்ளத்திற்கு உவப்பானது. எக்காரணத்திலாவது இந்தப பதினைந்து நாட்கள் பூசையைச் செய்யாமல் விடுபவர்கள் எளிதில் கிட்டாத ஓர் அரிய நல்வாய்ப்பினை இழந்து விடுகின்றார்கள்.

திருமணம் தடைப்படுதல், கடன் தொல்லைகள், குடும்ப சச்சரவுகள், தீராது என தீர்மானிக்கப்பட்ட நோய்கள் ஆகியவை மஹாளய பட்சத்தில் பிதுர் பூசைகளால் அடியோடு நீங்கும். ஆதலால் பரம பவித்திரமான இந்தப் பூசையை அனைவரும் செய்து பயனடைய வேண்டும். (தந்தை தாய் இருப்பவர்கள் திதி பூசை செய்யக்கூடாது.)

மிகப்புராதனமான நூல்களும், உபநிடதங்களும் பிதுர் பூசையின் மகத்துவத்தைச் சிறப்பித்துக் கூறியுள்ளன. இன்றும் திருவண்ணாமலையில் சிவபெருமான், வல்லாள மகாராஜாவுக்குத் தர்ப்பணம் கொடுப்பது விழாவாகவே வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகினற்து.

உடலை விட்டுப் பிரிந்த ஜீவன், சூட்சும சரீரம் பெற்று (பத்தாம்நாள்) அதன் மூலம் பல உலகங்களைக் கடந்து, அவரவர் பாவ புண்ணியத்துக்கேற்ப அந்தந்த உலகை அடைக-ின்றன. ஜீவன் அப்படிச் செல்லும்போது பயணக்களைப்பு தீர ஆறு மாதம் அதற்கு ஓய்வு அளிக்கப்படுகின்றது. அதனால்தான் இறந்த ஆறாம் மாதத் திதியை பக்தி சிரத்தையுடன் செய்ய வேண்டும் என்று கூறப்படுகின்றது. அப்போது நாம் அளிக்கும் உணவும், நீரும் உயர்ந்த அன்னமாகவும், பாயச பட்சணங்களுடன் பிதுர்லோகத்திலிருக்கும் ஜீவனைச் சென்றடைகின்றன. அன்புடன் நாம-ளித்த உணவை உண்டு மகிழ்ந்த ஜீவன், நம்மை மனங்குளிர ஆசீர்வதித்துக் காக்கின்றன. இறந்தபின்னரும்கூட அவர்கள் நம் நினைவிலேயே சர்வகாலமும் இருந்து ஆசீர்வதித்து நம்மை வாழ்விக்கின்றனர். இதன் சக்தி அளவிடமுடியாத ஒன்று இதன் பின் வருடத்திதியையும் செய்து முடித்துவிட்டு



பிதுர்களை மோட்சத்துக்கு அனுப்பும் முயற்சியில் இறங்கவேண்டும்.

பிரயாகை (அலகாபாத் திரிவேணி சங்கம்) காசி, காயா இம்மூன்றும் பிதுர்களுக்குரிய முக்கியமான ஷேத்திரங்களாகும். பிரளய காலத்தில் முதலில் தோன்றிய விருட்சம் ஆலமரம். அட்சயவடம் என்றும் கூறுவர். இது பிதுர்களுக்கும் முந்தியது. இதன் மூன்று பகுதிகளும் அலகாபாத், காசி, கயையில் உள்ளன. பிரயாகையில் அட்சயவடத்தின் வேர்ப்பகுதி திரிவேணி சங்கம நதிக்கரையில் உள்ள கோட்டையினுள் உள்ளது. மத்தியபகுதி காசி விஸ்வநாதர் கோயிலுக்குப் பின்புறம் உள்ள ஞான வாபிக்கு அருகில் உள்ளது. நுனிப்பகுதி பீகார் மாநிலத்திலுள்ள காயா(கயை) கோயிலினுள் உள்ளது.

முதலில் பிரயாகையில் பிதுர் பூசை செய்து விட்டு அட்சயவடத்தின் நுனியைத் தரிசிக்க வேண்டும். அங்கு அகமகிழ்ந்து நம்மை ஆசிர்வதிக்க காத்திருக்கும் பிதுர்களிடம் மரத்தினடியில் நின்று பூசை செய்து திருப்திதானா? எனக்கேட்டு விட்டு வணங்கி வரவேண்டும்.

நற்பலன்கள் சுவரில் எறிந்த பந்து போல் நம்மிடம் திரும்பி வந்து சேரும். மூன்று இடங்களிலும் இதைச் செய்ய இயலாதவர்கள் கயையில் மட்டுமாவது செய்வதுநல்லது.

மேற்குறிப்பிட்ட இடங்களுக்குச் செல்ல வசதியில்லாதவர்கள் தனுஷ்கோடி, இராமேஸ்வரம், கும்பகோணம், சக்கரப்படித்துறை, திருவிடைமருதூர், திருவள்ளூர் வீரராகவ சுவாமி கோயில், போன்ற தலங்களிலும் கங்கை, காவிரி, நர்மதை, கோதாவரி, போன்ற புண்ணிய நதிக்கரைகளிலும் செய்யலாம். நக்கிரஹங்களுக்கு தனிச்சந்நிதி உள்ள கோயில்களில் செய்வதும் சிறப்பானது. பிதுர் தர்ப்பணம் செய்து முடித்ததும் பசுவுக்கு வாழைப்பழம் அளிப்பது உடல் ஊனமுற்றோர், நோயாளிகள், பிச்சைக்காரர்கள், வறுமையால் வாடுவோரைத் தேடிப்போய் அன்னமளிப்பது போன்றவை மிகுந்த நன்மை தரும். வஸ்திர தானமும் நல்லது.

தை அமாவாசை, ஆடி அமாவாசை, சூரிய,சந்திர கிரகண காலங்கள், மாதப்பிறப்பு, பௌர்ணமி, ஏகாதசி, சப்தமி, துவிதியை போன்ற நாட்களில் பிதுர் தர்ப்பண பூசை செய்வதும் நல்லது.

பொதுவாகவே தினமும் பிதுர்களை நினைந்து பூசித்துவிட்டு மற்ற காரியங்களைத் தொடங்கவேண்டும். புரட்டாதி மாததில் வரும் கிருஷ்ண பட்ச (தேய்பிறை) பிரதமை முதல் அமவாசை வரை உள்ள பதினைந்து தினங்களிலும் (மஹாளய பட்சம்) பிதுர்களைப்

பூசிப்பது மிகவிசேடம்
ஒவ்வொரு அமாவாசையிலும் பிதுர்களைப் பூசிக்க வேண்டும். அந்தத் தினங்களில் எந்த ரூபத்திலும் பிதுர்கள் நம்மிடம் வருவார்கள். அதனால், அன்றைய தினத்தில் நம் வீட தேடி வருபவர்களுக்கு இல்லை என்று கூறாமல் அன்னமிடுவது அவசியம்.

தினமும் காகத்துக்கு ஒரு பிடி அன்னம் வைத்துவிட்டுப் பின்பு உண்பது பலவிதமான தோஷங்களையும் போக்கும். காகத்தின் மூலம் பிதுர்களுக்கு அவை போய்ச் சேரும். பொதுவாக தெய்வத்தன்மை பொருந்திய பிதுர்கள் கங்கை, யமுனை, மானஸசரோவரம் போன்ற புண்ணிய நதிகளின் அருகில் விரும்பித் தங்குவர். ருத்ராட்சம், ஸ்படிகம், துளசி, மஞ்சள், சந்தனம், வில்வம், தேங்காய் போன்றவற்றிலும் எழுந்தருளி நம்மை ஆசீர்வதிப்பார். எனவே பிதுர் பூசையின் போது இவற்றை வைக்க வேண்டும்.

ஆண் துணையற்ற எந்தப் பெண்ணும் தன்னை ஆதரித்துக் காப்பாற்றி, இறந்து போனவர்களுக்கு நன்றிக்கடனாக பிதுர் தர்ப்பண பூசைகளைச் செய்யலாம். இதை காருண்ய பிதுர் தர்ப்பணம் என்பர். கேரளத்திலுள்ள திருவல்லம் கோயிலில் பெண்கள் பிதுர் தர்ப்பணம் செய்வது வழக்கமாக உள்ளது.

நம்மை ஆசீர்வதித்துக் காப்பாற்ற பிதுர்கள் எப்போதும் தயாராக இருக்கும் போது நாம் அவர்களை மறக்கலாமா?

*******

## ஆடி அமாவாசை 12-08-2007

இவ்வாண்டு ஆடி அமாவாசை ஞாயிற்றுக்கிழமை 12-08-2007 அன்று தர்ப்பணம் (எள்நீர் இறைத்தல்) செய்யவிரும்புவோர் சைவ முன்னேற்றச் சங்கத்துடன் தொடபு கொள்ளவும்: 020 8514 4732

**மஹாளயபட்சம்**

**இவ்வருடம் 27-09-2007 (வியாழன்) ஆரம்பமாகி 10-10-2007 (புதன்கிழமை) மஹாளயபட்ச அமாவாசையுடன் முடிவடைகின்றது.**

## உயிரின் மூன்று குணங்கள்:

சாத்விகம் (அமைதி) இராசதம் (ஆதிக்கம்) தாமதம் (மயக்கம்)

மாயையில் தோன்றி கரணங்களில் மலர்ந்தனவே இவை. எல்லா உயிர்களுக்கும் இம் முக்குணங்கள் உண்டு. ஆனால் அவை ஒரே அளவில் நிலையாக இருக்காது. எண்ணற்ற விகிதாசாரங்களில் கலந்து அடிக்கடி மாறும். மனிதர் குணங்கள் வேறுபட்டிருப்பதற்கு இதுவே காரணம்.

**சாத்விகம் - அமைதி மேலோங்கி இருந்தால் சாந்தம் -பக்தி முதலியன தோன்றும்.**
**இராசதம் - ஆதிக்கம் மேலோங்கி இருந்தால் பற்றுள்ளம்-விடாமுயற்சி முதலியன தோன்றும்.**
**தாமதம் - மயக்கம் மேலோங்கியிருந்தால் சோம்பல்-பாவச்செயல்-தூக்கம் முதலியன தோன்றும்.**

* வெறுங்கையுடன் வரும் விருந்தாளி வெறுப்புடன் வரும் விருந்தாளியை விட உயர்ந்தவர்.


# உலகசைவப் பேரவையினரால் சுவிற்சர்லாந்து நாட்டில் 2007, யூன் மாதம் 25, 26, 27 ஆகிய திகதிகளில் நடைபெற்ற பதினோராவது உலகசைவ மகாநாடு

மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம் என்கின்ற கூற்று இன்று மெய்யாகி உலகநாடுகளில் எங்கெல்லாம் தமிழர் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சைவ சமயம் பற்றிய மேன்மைகள் சிறப்புப் பெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்த வகையிலே சுவிஸ் சூரிச் மாநகரில் ஸ்ரீ விஷ்ணுதுர்க்கா ஆலயத்திலே நடைபெற்ற பதினோராவது சைவமகாநாடு அனைவரையும் கவர்ந்து ஆலயத்திலே விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று "'அழகிற்சோதியன் அம்பலாத்தாடுவான்'' எனும் புராணச்கூற்றின்படி அமைந் ஸ்ரீ நடராஜப்பெருமானின் திருஉருவம் வீதிவழியாக ஊர்வலமாக ஆதீனங்களின் மடாதிபதிகள், அடியார்கள் புடைசூழ எமது சைவக்கொடியாம் "நந்திக்கொடி" காற்றில் அசைய மங்கள வாத்தியங்கள் ஒலிக்க மண்டப அரங்கிற்குள் அழைத்துவரப்பட்டு வழிபாட்டு ஆராதனைகளுடன் விழா ஆரம்பமானது. முதல் நிகழ்வாக எமது பாரம்பரியக்கலையான பரதக்கலையோடு ஏனைய நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. இலண்டனைச் சேர்ந்த தர்ஷனா தம்பு, ஜஸ்வினி தம்பு ஆகியோர் தமது நாட்டியத்தை மிகச் சிறப்பாக பார்ப்போர் வியக்கும் வண்ணம் சமர்ப்பித்தார்கள். அதனைத்தொடர்ந்து ஈழம் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தருமையாதீன கட்டளை விசாரணைத் தம்பிரான் சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ மௌன குமாரசுவாமித்தம்பிரான், பேரூராதீனம் தவத்திரு சுந்தரலிங்க ராமசாமி அடிகளார் ஆகியோர் தலைமை தாங்கினார்கள்.

அவர்கள் வழங்கிய ஆன்மிக அருளுரைகள் சமயத்தின் ஆழமான கருத்துக்களையும் இலகுவாக விளங்கக்கூடியவாறு அமைந்திருந்தது. அதனைத்தொடர்ந்து பல அறிஞர்கள் விழாவில் சிறப்புரை ஆற்றினார்கள். ஆலய பிரதமகுரு சரவணபவானந்தக்குருக்கள், சிங்கப்பூரைச் சேர்ந்த நாராயணன், இலண்டனைச் சேர்ந்த திரு. பரமகுரு, இலங்கை சைவ முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த "நந்திக்கொடிக் காவலர்'' சி. தனபாலா, தமிழ்நாட்டு அறிஞர்களான திருமதி கபாலிமூர்த்தி, சித்தாந்த கலாநிதி சி. சண்முகவடிவேல், ஆகியோரும், பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த பாரதிதாசன், கனடாவில் இருந்து வருகை தந்திருந்த உலகச் சைவப் பேரவையின் செயலாளர் நாயகம் வைத்தியகலாநதி சண்முகவடிவேல், கவிஞர் கந்தவனம், ஆகியோரும் அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த திரு. கணபதிப்பிள்ளை, தென்ஆபிரிக்காவைச் சேர்ந்த திரு. குப்புசாமி ஆகியோரின் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன. சைவசமயத்தின் தொன்மை, அது இன்று எதிர்நோக்கியுள்ள சாவால்கள் எனப் பல வகையிலும் அறிஞர்களின் சொற்பொழிவுகள் இடம்பெற்றிருந்தன. பெரியபுராணத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அறிஞர் மக் கிளாசன் அவர்களும், திரு. பரமகுருவும், (இலண்டன்) திரு மனோகரனும் (இலண்டன்) கௌரவிக்கப்பட்டனர். இந்த மகாநாட்டின் நிகழ்வின் நன்றியுரையை உலக சைவப் பேரவையின் தலைவர் திரு. பற்குணராசா வழங்கினார். கலந்து கொண்டனர். மகாநாடு மிகவும் சிறப்பாக நிறைவடைந்தது. பல நாட்டு சமய அறிஞர்களையும் ஒன்றிணைக்கும் மகாநாடு தொடர்ந்து நடைபெற வேண்டும் என்பதே அனைத்துலகத்திலும் வாழும் சைவ மக்களின் அவா.

# Divine Life for Children

## Time Is Most Precious



Swami Chinmayananda

Time is money. Time is more precious than money. Money can be earned again if it lost. But if the time is lost it cannot be regained. A moment once gone cannot be called back. Life is but a collection of small moments. Every moment should be well utilised in study of Gita, Kirtan, Japa, prayer, meditation, service of the poor and Mahatmas, study of class-lessons, honest earning of money. The "tick tick" of the clock reminds you that moments are passing away. Do not waste your time in seeing cinemas and reading novels. Realise the value of time. You will repent in the old age if you misuse it. Do not kill time in idle gossiping and chitchatting. You will become a great man if you use your time in a useful manner. Have your daily routine and stick to it. You will be crowned with success.

### Do Your Duty Well

Everyone has got some duty to do. Obey your parents. Your loving mother feeds you and makes you comfortable in every way. Love her. Respect her. Do willingly whatever she says, and please her. Obey your father also. Respect your noble father. He earns money for you. Father and mother take care of you. They are visible Gods for you. Learn your lessons well. Obey and respect your teacher. This is also your duty. After finishing your studies serve your mother-country. Relieve the sufferings of the poor. This is also your duty. Respect elders. Serve neighbours. Do Sandhya-Vandana and prayer three times a day. Your entire success in life depends upon discharging your duties well in different ways of life.

### Golden Rules

Obey your parents. Speak the truth always. Be punctual. Never tell a lie. Always be neat and tidy. Be good and do good. Be a hero. Help the poor and the needy. Do your daily duty well.
Learn your lessons well. Respect elders ad your teacher. Serve your country. Serve society. Never shirk work. Do not put off anything for tomorrow. If you do your duty well the battle of life will be won. You will be ever happy. Be ever active. Selfless service, sacrifice, love must be your motto. Lead an exemplary life. Be polite and courteous. Never injure the feelings of others. Never speak harsh words. Speak sweetly. Give up talkativeness. Do not abuse anybody. Do some good service everyday.

### Obey your elders


Obey your parents implicitly. Do not abuse or insult them. Do not use harsh words to them. Address them with respect. If you insult your parents you will undergo great sufferings in life.

Obey your teachers. Adore them like God. They bestow learning, which is the highest gift. They remove darkness and show the real light of wisdom. Those who insult their teachers will suffer the pangs of hell. If you obey your parents, teachers, brothers and sisters you will shone as a great man. You will get plenty of wealth, prosperity and happiness.

### Student-life

Student-life is the best period of life. There is no family-responsibility. A student is free from family-worries. Your father and mother take care of you. The school is the place for building good character and forming good habits. Mother also is your best teacher. She can mould your character. What the teacher teaches in one month can be taught easily by the mother at home in much lesser time. Have a programme of your daily work. Have a time-table. Stick to it at any cost. Morning time (5 to 7a.m.) is the best time for preparing your lessons. Do not burn the midnight oil during the examinations. This will affect your health. Play games daily. This will keep your body vigorous.

# THE WINNING OF FRIENDS





On the outskirts of a city, there grew a huge banyan tree. Many different kinds of birds lived in that tree. The spreading branches gave shade to many weary traveller.

"Alas! The birds who are living here will come to harm!" thought crow.

The crow flew from branch to branch and told the birds, " A hunter is coming here to spread his net. He has some rice grains to tempt you all. Dont touch the rice! or you will come to grief!"

The hunter came to the banyan tree and scattered the rice grains on the ground. Then he spread his net and hid nearby. But the birds who had been warned by crow did not thouch the rice and were not caught.

Just then, a flock of doves, whose kings was called Rajapura, flew past and saw the scatered rice. Crow cried out a warning, but the doves paid not attention. So they were all caught in the net. the hunter was very pleased to see that so many doves had been caught. He came out of hiding.



Rajapura saw him coming told his subjects. "Don't be scared. We must use our intelligence to escape from the hunter's net. But we must be united at this moment. When the hunter comes, lift the net together and fly away with it. Remember, unity is strength. Separately we can-not do anything.

**ஒற்றுமையே உயர்வு தரும்**

தேர் ஏறிவரும் அன்னையின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.
நியூ கண்ணன் ஸ்ரோர்ஸ், எட்மன்டன்

# New Kannan Stores






உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான
மளிகைப் பொருட்களும், ஈழம், இந்தியா போன்ற
நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட
அனைத்து விதமான உணவுப் பொருட்களும்,
பானங்களும், சஞ்சிகைகள், மரக்கறிவகைகள்,
CD, Audio & Video என்பனவற்றை சகாய
விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
மற்றும் பூசைக்குத் தேவையான
அனைத்துப்பொருட்களையும் பெற்றுக்கொள்ள
வடக்கு இலண்டனில் நீங்கள்
நாடவேண்டிய ஒரே நிறுவனம்

**New Kannan Stores**
**251 B Fore Street**
**Edmonton London N18 2TY**

**Tel : 020 8884 4979**




இலண்டனில் வாசன் அச்சகத்தினரால் (Tel: 020 8646 2885) வடிவமைத்து, அச்சிடப்பட்டு,
சைவ முன்னேற்றச் சங்கத்தால் 14.07.2007 அன்று வெளியிடப்படுகிறது.